Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror


www.tamilmirror.lk

FRIDAY, FEBRUARY 24, 2023

வெள்ளிக்கிழமை பெப்ரவரி 24, 2023 | ஒளி: 08 கதிர்: 216 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# ஒத்திவைக்க தேர்தல் இல்லை

### பாராளுமன்றத்தில் அறிவித்தார் ஜனாதிபதி



நாம் அறிந்த வகையில் இதுவரையில் சட்டபூர்வமான தேர்தல் திகதியொன்று அறிவிக்கப்படவில்லை. சிலர் மார்ச் 9ஆம் திகதி குறித்து பேசுகின்றனர். நான் அறிந்தவகையில் 9ஆம் திகதி தேர்தல் நடத்துவதற்கான சட்டபூர்வமான தீர்மானம் எதுவும் இல்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதியின் கட்டளை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எந்தவொரு தேர்தலையும் நான் ஒத்திவைக்கவில்லை. ஒத்திவைப்பதற்கு எந்தவொரு தேர்தலும் இல்லை என்றும் பாராளுமன்றத்துக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## “முஜிபுரை பலிகொடுத்து விட்டனர்” –ஜனாதிபதி



பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து இராஜினாமா செய்யவேண்டாம் என்று தான், முஜிபுர் ரஹ்மான் எம்.பிக்கு குறுஞ்செய்தி அனுப்பியதாகவும் அவரை அவரது கட்சியினர் பலிகொடுத்துவிட்டனர் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) தெரிவித்தார்.

முஜிபுர் ரஹ்மானை பாராளுமன்றத்துக்கு தான்தான் கொண்டுவந்ததாகவும் அவரை பலிக்கடாவாக ஆக்கப்போகின்றனர் என்பது தனக்குத் தெரியும் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அவரைப் பாதுகாக்க முயன்ற போதும் அவரை அவரது கட்சியினர் பலி கொடுத்து விட்டனர் என்றார்.

தொடர்ச்சி P2

## தேர்தலுக்கு ரூ.500 கொடுத்த யாழ். இளைஞன்

எம்.றொசாந்த்



எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நடத்த திட்டமிட்டிருந்த தேர்தலை நடத்த நிதியில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) அறிவித்திருந்த நிலையில், யாழ்ப்பாண இளைஞர் ஒருவர் தேர்தலை நடத்துவதற்கு 500 ரூபாய் பணத்தை அனுப்பி வைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “வாயை மூடு; உட்காரு” சபையில் ஒரே சத்தம்

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (23) உரையாற்றிக்கொண்டிருந்த போது எதிர்க்கட்சி எம்.பிக்கள் அவ்வப்போது குறுக்கு கேள்விகளை எழுப்பிக்கொண்டிருந்தனர்.

ஒருசிலரின் கேள்விகளுக்கு பதிலளித்த ஜனாதிபதி, சிலர் கேள்விகளைக் கேட்க முற்படுகையில், கேள்விகளைக் கேட்கவிடாது தொடர்ச்சியாக உரையாற்றினார். இதனால் தங்களுடைய ஆசனங்களில் இருந்து எழுந்துநின்றிருந்த எம்.பிக்கள் பலர், சலித்துப்போய் அமர்ந்துவிட்டனர்.

தொடர்ச்சி P2

## சின்னத் தேர்தல் ரிட் மனு ஒத்திவைப்பு



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்தை இரத்து செய்யக் கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனு மீதான பரிசீலனையை மே மாதம் 11ஆம் திகதி வரை ஒத்திவைத்து உயர்நீதிமன்றம், வியாழக்கிழமை (20) உத்தரவிட்டது.

ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் டபிள்யூ.எம்.ஆர் விஜேசுந்தர தாக்கல் செய்த குறித்த மனு, நீதியரசர்களான எஸ். துரைராஜா, ஷிரான் குணரத்ன, ஏ.எச்.எம்.டி நவாஸ் ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு, முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளபட்டது.

தொடர்ச்சி P2

## விக்கிரமசிங்க மலர்ச்சாலையில் சின்னத் தேர்தல் என்ற உடல்

### ஜனாதிபதியை எச்சரித்தார் டலஸ்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் உடல் விக்கிரமசிங்க மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் இதன்மூலம் தவறான வரலாற்று சம்பவத்துக்கு மீண்டும் அழைப்பு விடுக்க வேண்டாம் என ஜனாதிபதியை எச்சரிக்கின்றோம் என்றும் சுயாதீன எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதியின் கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தேர்தலை நடத்துமாறு சபை நடுவே ஆர்ப்பாட்டம்

நாட்டில் எந்தத் தேர்தலும் நடைபெறப்போவதில்லை என்று ஜனாதிபதி அறிவித்ததையடுத்து கிளர்ந்தெழுந்த எதிர்க்கட்சியினர், சபைக்கு நடுவே இறங்கி தேர்தலைக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து ஜனாதிபதி சபையிலிருந்து வெளியேறிச் சென்றார்.

எந்தத் தேர்தலையும் அரசாங்கம் ஒத்திவைக்கவில்லை என்றும் ஏனெனில் நாட்டில் எந்தத் தேர்தலும் நடைபெறப்போவதில்லை என்றும் அத்துடன் தேர்தல் ஒன்றை நடத்த அரசிடம் பணமும் இல்லை என்றும் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) அறிவித்தார்.

இதன்போது எதிர்க்கட்சி எம்.பிக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கருத்துகளை தெரிவித்து வந்தனர். தேர்தலை நடத்துவதற்கு தேவையான பணத்தை தேர்தல் ஆணையாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியை எதிர்க்கட்சி எம்.பிக்கள் தொடர்ந்து வலியுறுத்திய போதும் ஜனாதிபதி அதற்கு பதிலளிக்காது, தேர்தலை நடத்த முடியாது என்ற கருத்தையே வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

## மரண தண்டனை ஆவணத்தில் கையொப்பம் இடப்போவதில்லை

### ஜனாதிபதி தீர்மானத்தை அறிவித்தார் சட்டமா அதிபர்



நீதிமன்றத்தால் மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றுவதற்கான எந்தவோர் ஆவணத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிடமாட்டார் என்றும் தனது முன்னோர்கள் கடைப்பிடித்த நடைமுறையின் படி செயற்படுவார் என்றும் சட்டமா அதிபர், உயர்நீதி மன்றத்துக்கு வியாழக்கிழமை (23) அறிவித்தார்.

ஜனாதிபதியின் குறித்த தீர்மானத்தை ஜனாதிபதியின் செயலாளர் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், உச்ச நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2

வடக்கு மக்களின் வளங்களை

## பிரபாகரனே அழித்தொழித்தார்



வடக்கு மாகாண மக்களின் விவசாயம் உள்ளிட்ட வளங்களை அரசாங்கம் அழிக்கவில்லை என்றும் பிரபாகரனே அனைத்தையும் அழித்தொழித்தார் என்றும் நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்‌ஷ, வியாழக்கிழமை (23) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




வட மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, யாழ். மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை யாழ்ப்பாணத்திலுள்ள ஆயர் இல்லத்தில் நேற்று (23) காலை சந்தித்து கலந்துரையாடினார்.

அரச நிதியில் வெளிநாடு செல்வோர்

## சாதாரண வகுப்பில் மட்டுமே பயணிக்கலாம்

வெளிநாட்டு பயணங்களுக்கான விமான டிக்கெட்டுகளை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்தின் நிதியைப் பயன்படுத்தும்போது, பிரதம நீதியரசர், உச்ச நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் தவிர்ந்த ஏனைய அதிகாரிகள் சாதாரண வகுப்பு விமான டிக்கெட்டுகளை மாத்திரமே கொள்வனவு செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## பிரபாகரனை மறக்க மாட்டாம்

### விஜேதாஸவை இனவாதி என்கிறார் சிறிதரன்



விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே எமது தலைவர் என்றும் வாழ்நாள் முழுவதும் அவரை நாம் மறக்கப் போவதில்லை என்றும் தெரிவித்த இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட எம்.

தொடர்ச்சி P2

அமெரிக்க அதிகாரிகளுடனான

## பாதுகாப்பு பேச்சுவார்த்தையை பகிரங்கமாக்க முடியாது

### அச்சம் கொள்ள வேண்டாம் என்றும் அறிவிப்பு



அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், பாதுகாப்பு பிரிவுக்கும் இடையே இடம்பெற்ற பாதுகாப்பு சார் பேச்சுவார்த்தை விடயங்களை பகிரங்கப்படுத்த முடியாது என வெளிவிவகாரத்துறை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வியாழக்கிழமை (23) தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நாட்டை அடகு வைக்கப் போவதில்லை எனவும் நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு இடமளிக்கவும் போவதில்லை என்றும் தெரிவித்த அவர், அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் குறித்து எவரும் அச்சம் கொள்ள வேண்டியதில்லை என்றும் குறிப்பிட்டார்.

அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளின் விஜயம் குறித்து வாசுதேவ நாணயக்கார எம்.பி முன்வைத்த சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்திலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க அதிகாரிகளிகளின் அண்மைய விஜயம் குறித்து அரசியல் மட்டத்தில் பல பொய்யான விடயங்கள் பேசப்படுகின்றன.

தொடர்ச்சி P2

## சனத் நிஷாந்தவுக்கு எதிராக 2 குற்றப்பத்திரங்கள் தாக்கல்

நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சனத் நிஷாந்தவுக்கு எதிராக இரண்டு குற்றப்பத்திரங்களை தாக்கல் செய்துள்ளதாக சட்டமா அதிபரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வியாழக்கிழமை (23) அறிவிக்கப்பட்டது.

சட்டத்தரணி பியல் சிறிசேன மற்றும் பொலன்னறுவை சட்டத்தரணிகள் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி விஜித குமார ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் நேற்றையதினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி குறித்த விடயத்தை மன்றுக்கு அறிவித்தார்.

சட்டமா அதிபர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த ஆகியோர் மனுக்களில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

டெலிகொம் இன் வருடாந்த வருமானம்

## ரூ. 100 பில்லியனை கடந்துள்ளது



தேசிய தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான ஸ்ரீ லங்கா டெலிகொம் குரூப் (SLT குரூப்), 2022 நிதியாண்டில் ரூ. 100 பில்லியனுக்கு அதிகமான வருமானமாக ரூ. 108 பில்லியனை பதிவு செய்திருந்தது.

P3

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஒத்திவைக்க தேர்தல் இல்லை

எதிர்க்கிறார்கள், எதிர்க்கிறார்கள். தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதை எதிர்க்கட்சி எதிர்க்கிறதா?" என்று கேள்வியெழுப்பினார்.

"ஆனால், அத்தியாவசிய சேவைகள் தொடர்பில் விவாதம் கோரவில்லை. தேர்தலை ஒத்திவைப்பதாகக் கூறியே விவாதம் கேட்டிருந்தனர். தேர்தல் ஒத்திவைக்கப்படவில்லை. ஒத்திவைப்பதற்கு தேர்தல் ஒன்று இல்லை.

பொதுவாக இந்த விவாதத்தில் கலந்துகொள்வதில்லை என்று நான் அறிவித்திருந்தேன். ஏனென்றால் எனக்கு அரசியல் தேவையில்லையென்று நான் கூறியிருந்தேன். எனினும், தேர்தல்கள் ஆணைக்குழுவும் நீதிமன்றத்துக்கு சென்று, தேர்தல் ஒன்றை நடத்த முடியாது என்று கூறுகிறது.

எனினும், சத்தியக் கடதாசி வழங்கியிருப்பதால் இதுகுறித்து பேச நினைத்தேன். அப்படியில்லையெனில், எனக்கு கீழுள்ள நிதியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு பாரிய அநீதி ஏற்படும்.

தேர்தலை நடத்துவதற்கான நிதியை வழங்க முடியாதிருப்பதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு திறைசேரியின் செயலாளர் அறிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் உண்மையில்லை.

முதலில் இந்த நாட்டின் பொருளாதார நிலைமையையும், தேர்தல் ஒன்றை நடத்த பணம் இல்லை என்பதையும் அதேபோல் இது பொருளாதாரத்துக் உகந்தல்ல என்றும், உறுப்பினர் எண்ணிக்கை 5 ஆயிரத்துக்கு குறைந்தபின்னர் தேர்தலை நடத்துமாறும் டிசெம்பர் 14ஆம் திகதி, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு நான் அறிவித்திருந்தேன்.

அன்று 10 பில்லியன் ரூபாய் தேவையெனக் கூறினார்கள். பண வீக்கம் குறைந்துள்ளதாக யாரும் கூறவில்லை, அதிகரித்திருப்பதாகவே கூறுகின்றனர். எனவே, 10 பில்லியன் அல்ல 12 - 13 பில்லியன் ரூபா தேவைப்படும் என்று நாம் கணக்கிட்டிருந்தோம். எனினும், 5 பில்லியன் ரூபாய் தேவை என்று கேட்டுள்ளனர். எனவே, இந்த மதிப்பீட்டறிக்கையை குறித்து அமைச்சு மீ ண்டும் ஆராய்ந்துள்ளது. பொலிஸார் அதிகமாக கோருகின்றனர். விலைகள் அதிகரித்துள்ளதால் 2 அல்லது 3 பில்லியன் ரூபாய் தேவை என்று அவர்கள் கோருகின்றனர்.

இதுவொரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. 10 பில்லியன் ரூபாய் செலவு உள்ள இடத்தில் 5 பில்லியன் ரூபாவில் தேர்தலை நடத்த முடியும் என்று ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் கூறுகிறார். எரிபொருள் விலை உள்ளிட்ட அனைத்தும் அதிகரித்துள்ளதால் ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லை இன்னும் அதிகமாக தேவை என்று பொலிஸார் கூறுகின்றனர்.

ஏனைய திணைக்களங்கள், ஒவ்வொரு திணைக்களத்தில் இருந்தும் ஒவ்வொரு மதிப்பீடுகளை எங்களுக்கு அனுப்புகின்றனர். ஆனால், தேர்தல் ஆணைக்குழு இந்த அடிப்படை பிரச்சினையை சீர் செய்ய வேண்டும். இவற்றுக்கு நிதியமைச்சு பதிலளிக்க வேண்டிய தேவை இல்லை.

தேர்தல் பணிகளை தொடர்ந்து முன்னெடுக்குமாறு உயர்நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பார்த்தால், அப்படியானதொரு தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கவில்லை.

மென்டமூஸ் உத்தரவொன்று தேவையில்லை என மனுதாரர் தரப்பினால் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மெண்டமூஸ் உத்தரவொன்று தேவையில்லையென்றால் நீதிமன்றத்தினால் வழங்குவதற்கு தீர்ப்பெதுவும் கிடையாது.

7 ஆவது பிரதிவாதியான பிரதமரிடம் எந்த நிவாரணமும் கோரப்படவில்லை என அவர் சார்பாக ஆஜரான நெரீன் புள்ளே நீதிமன்றித்தில் குறிப்பிட்டார். இந்த விடயத்தில் அரசாங்கத்திற்கு எந்தப் பிணைப்பும் கிடையாதும்.

அரசாங்கத்துக்கு எதிராக தீர்ப்பொன்றை வழங்குமாறு கோரியிருக்கலாம். இதில் எதனையும் மனுதாரர்கள் கோரவில்லை. இதன்படி எந்தவொரு அதிகாரியையும் குறைகூற முடியாது" என்றார்.

மேலும், எம்.பிக்களின் கேள்விகளுக்கு பதிலளித்த ஜனாதிபதி, முதலில் தேர்தல் திகதியை அறிவிக்க வேண்டும் என்றும் தாம் சட்டத்தின் படி செயற்படுவதாக குறிப்பிட்டதுடன், அரசியலமைப்பின் பிரகாரம் அனைத்து தேர்தல்களையும் உரிய நேரத்தில் நடத்துவோம் என்றும் தெரிவித்தார்.

## வாயை மூடு: ...

அதுவரையிலும் நிதானமாக பதிலளித்துக்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில், எதிர்க்கட்சியினரின் கேள்விகளுக்கு முகங்கொடுக்கமுடியாது, "உட்காரு; வாயை மூடு" என விரலை நீட்டி சுட்டிக்காட்டி கடுந்தொனியில் கூறினார்.

## சின்னத் தேர்தல்...

அதன்போது, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், தேர்தலை நடத்துவதற்கான தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் இல்லை என்றும் வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் தேர்தலுக்கான நிதியை திறைசேரி விடுவிக்காத காரணத்தினால் தேர்தலை நடத்துவதில் தடைகள் ஏற்பட்டுள்ளதாக மன்றுக்கு அறிவித்தார்.

நிதி வழங்குவது தொடர்பில் விளக்கமளித்ததுடன், மேலும் நிதி வழங்குவதற்கு ஆலோசனைகள் அவசியம் என்று திறைசேரி செயலாளர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புல்லே அறிவித்தார். தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள், பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்டோரை பிரதிவாதிகளாக பெயரிட்டு குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முழு நாடும் நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலை நடத்துவதற்கான தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானம் பேரழிவுக்கு வழிவகுக்கும் என்றும் பொது மக்கள் மீது சுமையை ஏற்படுத்தும் என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## முஜிபுரை பலிகொடுத்து விட்டனர்: ஜனாதிபதி

பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து இராஜினாமா செய்யவேண்டாம் என்று தான், முஜிபுர் ரஹ்மான் எம்.பிக்கு குறுஞ்செய்தி அனுப்பியதாகவும் அவரை அவரது கட்சியினர் பலிகொடுத்துவிட்டனர் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) தெரிவித்தார்.

முஜிபுர் ரஹ்மானை பாராளுமன்றத்துக்கு தான்தான் கொண்டுவந்ததாகவும் அவரை பலிகடாவாக ஆக்கப்போகின்றனர் என்பது தனக்குத் தெரியும் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அவரைப் பாதுகாக்க முயன்ற போதும் அவரை அவரது கட்சியினர் பலி கொடுத்து விட்டனர் என்றார்.

முஜிபுர் ரஹ்மானை பாராளுமன்றத்தில் வைத்துக்கொள்வதற்கு தான் கடுமையாக முயற்சித்ததாகவும் அதனை விட ஒன்றையும் தான் கூறவிரும்பவில்லை என்றார்.

"பதவி விலக வேண்டாம். நீங்கள் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டியவர், உங்களை உங்கள் கட்சியினர் பலி கொடுக்கப் போகின்றனர்" என்று அவருக்கு தகவல் அனுப்பியதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.


## தேர்தலை...

இதனால் கிளர்ந்தெழுந்த ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திர கட்சி, விமல், டலஸ் அணி எம்.பி.க்கள் ஜனாதிபதிக்கு எதிராக சபை நடுவே இறங்கி எதிர்ப்பு பதாதைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கோஷங்களை எழுப்பி கூச்சலிட்டவாறு அரசுப் பக்கம் நகரவே ஜனாதிபதி சபையில் இருந்து வெளியேறிச்சென்றார். அவரை சுற்றி அமைச்சர்களும் எம்.பிக்களும் சென்றனர். இதன்போது படைகளை சேவிதர் சபாபீடத்துக்கும் செங்கல்கோலுக்கும் பாதுகாப்பு வழங்கினர்.

ஜனாதிபதி சபையில் இருந்து வெளியேறிச் சென்றதும் சபை நடுவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள் அமைதியாகி தங்களின் ஆசனங்களுக்கு சென்றமர்ந்தனர்.

## தேர்தலுக்கு ரூ.500 கொடுத்த யாழ். இளைஞன்



தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கே குறித்த பணத்தை காசுக் கட்டளை மூலம் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பகுதியை சேர்ந்த இளைஞர் அனுப்பியுள்ளார். தேர்தலை நடத்த தன்னால் முடிந்த நிதியுதவி என்று "தேர்தலை நடாத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டுவோம், சிறு துளி பெருவெள்ளம்" என்று தபாலகம் ஊடாக 500 ரூபாய் காசுக் கட்டளையை அனுப்பியுள்ளார்.

## பிரபாகரனை மறக்க மாட்டாம்

பி. எஸ். சிறிதரன், உங்களாலும் பிரபாகரனை மறக்க முடியவில்லை என்று தெரிவித்தார்.

மேலும், நீதியமைச்சர் விஜேதாஸவை பார்த்து நீங்கள் இனவாதத்தை விதைப்பவர் என்றும் நீங்கள் ஓர் இனவாதி எனவும் ஆவேசமாக தெரிவித்தார். பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதியின் கட்டளை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நீங்கள் தற்போதும் பிரபாகரனை மறக்கவில்லை, நாங்களும் மறக்கப் போவதில்லை. வாழ்க்கை முழுவதும் மறக்க மாட்டோம் எங்கள் தலைவர் பிரபாகரன்தான், அவர் நேர்மையான கண்ணியமான தலைவர் என்று குறிப்பிட்டார்.

யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் நிறைவு பெறும் நிலையில் பிரபாகரனை விமர்சிக்காதீர்கள், படித்தவர்கள், போல் உரையாற்றுங்கள் முட்டாள் போல் பேச வேண்டாம் , நீங்கள் இனவாதத்தை விதைப்பவர். நீங்கள் ஓர் இனவாதி" என்றார்

## மரண தண்டனை ஆவணத்தில் கையொப்பம் இடப்போவதில்லை

போதைப்பொருள் குற்றச்சாட்டு குறித்து மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு குற்றவாளிகளுக்கு தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2019ஆம் ஆண்டு கையொப்பமிட்டிருந்தார். அந்த தீர்மானத்தை இரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுக்கள் உயர்நீதிமன்ற நீதியரசர்களான விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ, எஸ். துரைராஜா, காமினி அமரசேகர மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே இந்த விடயம் அறிவிக்க ப்பட்டதுடன், ஜனாதிபதி கையொப்பமிடமாட்டார் என்ற உறுதிமொழியை கருத்திற் கொண்டு, மனுதாரர்களின் உடனடி கவலைகளை நிவர்த்தி செய்துள்ளதாக மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன மன்றுக்கு அறிவித்ததுடன், மனுக்களை மீளப்பெற முடியாது என்றும் அறிவித்தார்.

தரப்பினரின் சமர்ப்பிப்புகளை கருத்திற்கொண்டு, எதிர்காலத்தில் மரணதண்டனை நிறைவேற்றப்படும் என்ற முக்கிய அச்சுறுத்தல் ஏற்பட்டால், மனுக்களை மீள் பரிசீலனை செய்வதற்கும் அதுவரை மனுக்கள் மீதான நடவடிக்கைகளை நிறுத்துவதற்கும் அமர்வு தீர்மானித்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் சட்டத்தரணி கவிந்து ஹேவா கீகனகே உள்ளிட்ட பல மனுதாரர்களால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

சட்டமா அதிபர், நீதி அமைச்சர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகர் உட்பட பலர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## சாதாரண வகுப்பில் மட்டுமே பயணிக்கலாம்

இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் கையொப்பமிடப்பட்ட 2023 பெப்ரவரி 22 ஆம் திகதி சுற்றறிக்கை பிரதமரின் செயலாளர், அமைச்சரவை செயலாளர் மற்றும் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதிகாரி ஒருவர் வணிக வகுப்பில் பயணம் செய்ய விரும்பினால், சாதாரண வகுப்பு விமான டிக்கெட்டின் விலைக்கும் வணிக வகுப்பு விமான டிக்கெட்டின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தை தனது தனிப்பட்ட பணத்திலிருந்து செலவழித்து வணிக வகுப்பில் பயணம் செய்யலாம்.

இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மேற்கூறிய விதிகளுக்குப் புறம்பாக ஒரு விசேட காரணத்துக்காக அரசாங்க நிதியைப் பயன்படுத்தி அதிகாரி ஒருவர் வணிக வகுப்பில் பயணிக்க விரும்பினால், அவர் தேவையான தகவல்களை சமர்ப்பித்து ஜனாதிபதியின் செயலாளரின் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் 2023 மார்ச் 01 முதல் நடைமுறைக்கு வருகிறது. அதன்படி இந்த விடயம் தொடர்பில் முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் அல்லது அறிவுறுத்தல் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள், குறித்த திகதி முதல் செல்லுபடியாகாது. நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் நிதி நெருக்கடிகள் காரணமாக அரசாங்கத்தின் நிதியை அத்தியாவசிய பணிகளுக்கு மாத்திரம் மிகவும் சிக்கனமான முறையில் செலவிடுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு இணங்க ஜனாதிபதி இந்த பணிப்புரையை வழங்கியுள்ளார்.

## விக்கிரமசிங்க மலர்ச்சாலையில் சின்னத் தேர்தல் உடல்

அங்கு மேலும் தெரிவித்த அவர், "நாட்டில் தோற்றம் பெற்ற 30 வருடகால யுத்தம், இனகலவரங்கள் ஆகியவற்றுக்கு ஐக்கிய தேசியக் கட்சியே தலைமை தாங்கியது. வடக்கு மக்களின் வாக்குரிமை மற்றும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதை தொட ர்ந்தே ஆயுதப்போராட்டம் தோற்றம் பெற்றது. இதற்கு ஐக்கிய தேசிய கட்சியே தலைமை தாங்கியது.

நாட்டில் மீண்டும் அமைதியற்ற தன்மையை தோற்றுவிக்கும் செயற்பாடுகளை ஜனாதிபதி தற்போது முன்னெடுத்துள்ளார்" என்றார்.

## பாதுகாப்பு பேச்சுவார்த்தையை பகிரங்கமாக்க முடியாது

22 பாதுகாப்பு அதிகாரிகள் நாட்டுக்கு வருகை தந்ததும், அவர்களுக்கு விசேட பாதுகாப்பு வ ழங்கப்பட்டதும் உண்மை என்றும் இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்துக்கு முரணாக அவர்கள் நாட்டுக்கு வருகை தந்தார்கள் என்று குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது என்றும் குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சின் அழைப்புக்கு அமைய அவர்கள் நாட்டுக்கு விஜயம் செய்யவில்லை என்றும் அவர்கள் தேசிய பாதுகாப்பு தரப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட நாட்டுக்கு வருகை தந்தார்கள் என்றும் குறிப்பிட்ட அவர், ஆகவே பாதுகாப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளை பகிரங்கப்படுத்த முடியாது என்றார்.

சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகின்ற காரணத்தால் இந்நாடுகளுடன் தொடர்பு கொள்வதை சந்தேக பார்வையில் பார்க்க முடியாது என்றும் இலங்கை அனைத்து நாடுகளுடன் இணக்கமாகவே செயற்படு றது என்றும் குறிப்பிட்டார்.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால் அனைத்து நாடுகளின் ஒத்துழைப்பையும் தற்போது எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## பிரபாகரனே அழித்தொழித்தார்

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதியின் கட்டளை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண விவசாயத்தை, வளங்களை அரசாங்கம் இல்லாதொழிக்கவில்லை என்றும் வடக்கு மாகாணத்தில் விவசாயத்துறையும், மக்களின் வாழ்க்கையையும் அழித்தொழித்தார் என்றும் தெரிவித்த அவர், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையைக்கூட பிரபாகரனே அழித்தார் என்று குறிப்பிட்டார்.

பிரபாகரனின் நிர்வாகத்தினால் தான் வடக்கு மக்களின் வாழ்க்கை இல்லாதொழிக்கப்பட்டது. உண்மையை மறைத்து கடந்த இரு வருட காலத்தில் தான் வடக்கு மாகாண விவசாயம் இல்லாதொழிக்கப்பட்டது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது, ஸ்ரீதரன் எம்.பி. பொறுப்பானவர் என்ற வகையில் உண்மையாக செயற்பட வேண்டும்.

நான் இனவாதம் பேசவில்லை, நீங்கள் தான் இனவாதம் பேசுகிறார்கள். நீங்கள் 100 மணித்தியாலம் பேசினால் 100 மணித்தியாலமும் இனவாதம்தான் பேசுகின்றீர்கள் வடக்குக்கு சென்று நல்லிணக்கத்தை ஸ்தாபிக்க நாம் முயற்சிக்கிறோம்.

நல்லிணக்கத்துக்கு வடக்கு மக்கள் முழு ஆதரவு வழங்குகிறார்கள் என்றும் இனவாத அரசியல்வாதிகள் தான் தடையாக செயற்படுகிறார்கள் என்றும் குறிப்பிட்ட அவர், எனினும் ஒரு சிலர் அதற்கு விதி விலக்காக உள்ளார்கள் என்றார்.

## சனத் நிஷாந்தவுக்கு எதிராக 2 குற்றப்பத்திரங்கள் தாக்கல்

2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 23 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலப்பகுதியில், பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய சனத் நிஷாந்த, இலங்கையின் நீதித்துறை தொடர்பாக, குறிப்பாக நீதித்துறை அதிகாரிகள் தொடர்பில் சில கருத்துகளை வெளியிட்டதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். அரசியலமைப்பின் 105(3) சரத்தின் பிரகாரம் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக சனத் நிஷாந்த எம்.பியை தண்டிக்க உத்தரவிடுமாறு மனுதாரர்கள், கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆட்கொணர்வு மனு மீதான கட்டளை இராணுவத்துக்கு எதிராக உள்ளமை வெற்றி

### சிரேஸ்ட சட்டத்தரணி எஸ். இரட்ணவேல்

க. அகரன்

ஆட்கொணாவு மனு மீதான கட்டளை இராணுவத்தினருக்கு எதிரானதாகவுள்ளமை மிகப்பெரிய வெற்றி எனவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களை ஆஜர்ப்படுத்தவும் அல்லது காரணம் கூறவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதாக சிரேஸ்ட சட்டத்தரணி எஸ். இரட்ணவேல் தெரிவித்தார்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் பொன்னம்பலம் கந்தசாமி (கந்தம்மான்), சின்னத்துரை சசிதரன் (எழிலன்), உருத்திரமூர்த்தி கிருஸ்ணகுமார் (கெலம்பஸ்) ஆகியோர் தொடர்பாக ஆட்கொணர்வு மனு மீதான தீர்ப்பு இன்று (23) வழங்கப்பட்டது.

டெலிகொம் குழுமத்தின் வருடாந்த வருமானம்

# ரூ. 100 பில்லியனை கடந்துள்ளது

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 2022 நிதியாண்டில் குழுமத்தின் வருமான அதிகரிப்பு 5.2 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்திருந்ததுடன், வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ. 4,765 மில்லியனைப் பதிவு செய்திருந்தது. பெரும் பொருளாதார மற்றும் தொழிற்துறைசார் சவால்களுக்கு மத்தியில் நிறுவனத்தால் இந்த உயர்ந்த பெறுபேறுகளை எய்த முடிந்திருந்தமை விசேட அம்சமாகும்.



2021ஆம் ஆண்டில் குழுமம் முன்னெடுத்திருந்த மாற்றங்களுடனான பயணத்தினூடாக, குழுமத்தால் இந்தப் பெறுபேறுகளை எய்தக்கூடியதாக இருந்தது. குறிப்பாக ஒன்றிணைக்கப்பட்ட வியாபாரக் கட்டமைப்பு, வசதிகள் மற்றும் வர்த்தக நாம ஒன்றிணைப்பினூடாக செலவுச் சிக்கனமான செயற்பாடுகள் போன்றவற்றினூடாக, தொழிற்பாட்டு வினைத்திறனில் கவனம் செலுத்த முடிந்திருந்தது.

ஸ்ரீ லங்கா டெலிகொம் தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "2022ஆம் ஆண்டு என்பது, நாம் இதுவரையில் அனுபவித்திராத பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் நிறைந்த ஆண்டாக அமைந்திருந்தது. கடினமான தொழிற்பாட்டு சூழலிலும், எமது தொழிற்றுறைக்கு உரித்தான பல சவால்களுக்கு மத்தியிலும், எமது பிரதான வியாபார செயற்பாட்டினுள் புத்தாக்கங்களை உள்வாங்கி, செலவுச் சிக்கனமான செயற்பாடுகளை மேற்கொள்ள முடிந்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

அதேவேளை, இந்த நெருக்கடியான சந்தைச் சூழலில் இயங்க வேண்டிய முறையை பயின்று செயலாற்றி இருந்தமையானது, எம்மை உறுதியான நிலைக்கு கொண்டு செல்ல உதவியிருந்தது. முன்னேற்றகரமான எந்த வியாபாரத்தையும் போன்று, மாற்றியமைக்கப்பட்ட செயற்பாடு என்பது வளர்ச்சிக்கும், சந்தையில் நிலவும் சவால்களை கடந்து செல்வதற்கும் உதவியாக அமைந்திருப்பதுடன், வியாபார நிலைபேறாண்மையை எய்துவதற்கும், எதிர்காலத்துக்கு தயாரான பணியாளர் குழாமை கட்டியெழுப்பவும் உதவியாக அமைந்திருக்கும்.

தொடர்பாடல் சேவைகளை வழங்கும் நிறுவனம் என்பதிலிருந்து, தொழில்நுட்ப (தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல்) சேவைகளை வழங்கும் நிறுவனமாக எம்மை மாற்றியமைக்கும் நோக்கத்துடன் செயலாற்றுவதில் நாம் உறுதியாக பயணிப்பதுடன், அதனூடாக எமது வாடிக்கையாளர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் நவீன தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவும், நாட்டின் முக்கிய தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவளித்து, சமூகப் பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிப்பு வழங்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

வியாபார மீட்சி, முகாமைத்துவ தீர்மானங்கள் மற்றும் 10,000க்கும் அதிகமான எமது உறுதியான ஊழியர் குழுவின் ஆற்றல்கள் போன்றவற்றினூடாக எமக்குக் காணப்படும் வாய்ப்புகளினூடாக நெருக்கடியான கடினமான சூழலிலும் எம்மால் சிறந்த வகையில் இயங்கக்கூடியதாக இருக்குமெனக் கருதுகின்றோம்" என்றார்.

நிறுவன மட்டத்தில், SLT இன் நான்காம் காலாண்டு வருமானங்கள், முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 19.9% இனால் உயர்வடைந்து, ரூ. 18.1 பில்லியன் அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தது. கடந்த ஆண்டில் பதிவாகியிருந்த முழு வருமானத்துடன் ஒப்பிடுகையில் 13% வளர்ச்சியுடன், ரூ. 67.6 பில்லியனாக பதிவாகியிருந்தது.

இதன் பெறுபேறாக, 2022 நிதியாண்டில் SLT நிறுவனம் உறுதியான வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ. 8,463 மில்லியனை பதிவு செய்திருந்தது. இது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 44.3% அதிகரிப்பாகும்.

வருடாந்த வருமான அதிகரிப்பில் பங்களிப்பு வழங்கியிருந்த காரணிகளில், Carrier Domestic, Broadband மற்றும் Carrier International வருமான மூலங்கள் போன்றன அடங்கியிருந்தன. மேலும், 2022 மார்ச் மாதத்தில் இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கத்தின் காரணமாக, நிறுவனம் பெருமளவு அந்நியச் செலாவணி மேலதிக இருப்பையும் பதிவு செய்திருந்தது.

நான்காம் காலாண்டில் குழுமத்தின் தொழிற்பாட்டு இலாபம் முன்னைய காலாண்டுடன் ஒப்பிடுகையில், 5.1% இனால் உயர்ந்து, ரூ. 3 பில்லியனாக பதிவாகியிருந்தது.

காலாண்டுக்கு காலாண்டு பெறுபேறுகள் என்பது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உறுதியானதாக பதிவாகி இருந்ததுடன். 16% இனால் அதிகரித்து ரூ. 3 பில்லியனாக பதிவாகியிருந்தது. ஆனாலும், நிதியாண்டு முழுவதிலும், மோசமான பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல்களின் தாக்கத்தின் காரணமாக, ஆண்டின் தொழிற்படு இலாபம் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 9.6% இனால் குறைந்து ரூ. 12.5 பில்லியனாகப் பதிவாகியிருந்தது.

ரூபாய் மதிப்பிறக்கம், பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்கள் அதிகரிப்பு போன்றவற்றால், குழுமத்தின் தொழிற்பாட்டு செலவு என்பது கடந்த ஆண்டில் பெருமளவு அதிகரித்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 67.7 பில்லியனாக பதிவாகியிருந்தது.

குழுமத்தின் மொபைல் பிரிவான மொபிடெல் பிரைவட் லிமிடெட் போன்ற மேலும் சில துணை நிறுவனங்கள் இந்தக் காலப்பகுதியில் அதிகளவு அந்நியச் செலாவணி இழப்பை பதிவு செய்திருந்த நிலையில், கடந்த ஆண்டில் குழுமத்தின் வளர்ச்சியில் மறைமுகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

கடந்த மூன்றாண்டு காலப்பகுதியில், நாட்டின் தொழில்நுட்பசார் மற்றும் தொடர்பாடல் தேவைகள் பெருமளவு அதிகரிப்பையும், மாற்றத்தையும் எதிர்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளை நிவர்த்தி செய்வதில் SLT-MOBITEL இன் பொறுப்பு என்பது முன்னரை விட தற்போது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருப்பதுடன், நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகள் மற்றும் தொழிற்றுறைகளுக்கு தடங்கலில்லாத தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் செயற்பாடுகளை வழங்குவதற்கான ஏக பின்புல சேவை வழங்குநராகவும் திகழ்கின்றது.

எனவே, இந்தக் கால கட்டத்தில் நிறுவனத்தின் உறுதித் தன்மை மற்றும் வினைத்திறன் போன்றன முக்கியத்துவம் வாய்ந்ததுடன், சகல நிறுவனசார் தீர்மானங்களும் இந்த தேசிய பொறுப்பை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# நரியை போன்று தந்திரமிக்கவர் ரணில்

காட்டில் வாழும் மிருகங்களில் தந்திரமான மிருகமாக நரியை கூறுவதை போன்று, நாட்டில் வாழும் மனிதர்களில் மிகவும் தந்திரம் மிக்கவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார் என்றும், இவர் எப்படி இலங்கையில் பிறந்தார் என்று கடவுளுக்கே தெரியாது என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட அத்தியாவசிய சேவைகள் பிரகடனம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில், நாட்டில் தேர்தலுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, அது நடக்காது என்பது ஜனாதிபதியின் கருத்தின்மூலம் அறியமுடிகின்றது. நாடு சர்வாதிகாரத்தை நோக்கி போகின்றது என்பது இப்போது நடக்கும் நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. காட்டில் வாழும்



மிருகங்களில் தந்திரமான மிருகமாக நரியை கூறுவதை போன்று, நாட்டில் வாழும் மனிதர்களில் மிகவும் தந்திரம் மிக்கவராக ஜனாதிபதியை கூறுகின்றனர்.

பொருளாதாரம் வீழ்ந்துள்ள நிலையில் அதற்கான காரணத்தை கண்டறியாது, அதனை கட்டியெழுப்பும் திட்டங்களை முன்வைக்காது, ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்றுவதன்மூலம் தீர்வு காண முடியாது. கடவுளுக்கு தெரியாது பிறந்தவர்களை போன்று ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டில் எப்படி பிறந்தார் என்று கடவுளுக்கே தெரியாமல் இருக்கும். அந்தளவுக்கு அவரின் நடவடிக்கைகள் இருக்கின்றன. ஜனநாயகம், நீதி இன்றி மக்களின் வாழ்க்கை அடகு வைக்கப்படுகின்றது.

இதேவேளை இந்தப் பாராளுமன்றம் கோமாளிகளின் கூடாரங்கள் போன்றே இருக்கின்றது. இதன்மூலம் மக்களுக்கு ஏதேனும் கிடைக்கின்றதா? நாட்டுக்காக உணவு வழங்கும் விவசாயிகள் வீதிகளுக்கு வந்துள்ளனர். அவர்களின் நகைகள் அடைவில் இருக்கின்றன.

நாட்டை சீரான பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும். இந்த மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்க வேண்டும். நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்து மக்கள் நாளாந்தம் வாழ முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு மக்கள் கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்த நாடு மிகவும் மோசமான வறுமைக்குள் தள்ளப்பட போகின்றது என்றார்.

# பச்சை பொய்

உள்ளூராட்சி சபைகளுக்காக ஐக்கிய தேசிய கட்சி வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருக்கையில், தேர்தலுக்கான அறிவித்தல் வெளியாகவில்லை என்று அந்தக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி பச்சைப் பொய்களை கூறுகின்றார் என்று சுயாதீன அணியை சேர்ந்த டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட அத்தியாவசிய சேவைகள் பிரகடனம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

உலகில் மூன்று வகையான பொய்கள் உள்ளன. பொய், புள்ளிவிவர பொய், பச்சைப்பொய் ஆகியன உள்ளன. இங்கு அரச தலைவரான ஜனாதிபதி பச்சைப் பொய்களை கூறியுள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்படவில்லை என்று கூறுகின்றார். அவரின் கட்சி நூற்றுக்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்காக வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளது. அப்படியென்றால் அவர்கள் ஏன் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய வேண்டும். உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை நான்கு ஆயிரமாக குறைக்கும் சட்டமூலத்தை கொண்டு வந்துள்ளதாக கூறியுள்ளனர். இது முற்றிலும் பொய்யாகும் என்றார்.

இந்தச் சபையில் யார் தேர்தலை தடுக்கும் செயற்பாடுகளின் பின்னால் இருக்கின்றனர் என்பது தெரியவருகின்றது. இதுபோன்று வரலாற்றில் சம்பவங்கள் நடந்துள்ளன. இரத்தத்தால் கலந்த வரலாறுகளும் உள்ளன. அப்போது எதிர்க்கட்சிகள் தடை செய்யப்பட்ட வரலாறும் உள்ளது. இவ்வாறான வரலாற்றை நோக்கி போக வேண்டாம் என்று கேட்கின்றோம்.

இதனால் மக்கள், ஜனாதிபதி, நீதிமன்றத்திடம் கேட்பது இந்த அழிவை விநோதமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். இறுதியாக ஜனநாயகமே வெற்றியடைய வேண்டும். இதனால் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை தடுக்க முயன்றால் அதற்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் அணிதிரள வேண்டும் என்றார்.

# பிளவுகளை ஏற்படுத்த முயற்சி



அரசாங்க நிதி தொடர்பான தெரிவு குழுவிற்கான தலைவர் தெரிவில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவுகளை ஏற்படுத்தும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதாக அக்கட்சியின் எம்.பி. ஹர்ஷ டி சில்வா குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) வியாழக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்தபோதே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்க நிதி தொடர்பான தெரிவு குழுவின் தலைவர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியினர் எனது பெயரை செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தெரிவு குழு கூட்டத்தின் போது பரிந்துரை செய்துள்ளார்கள். எதிர்க்கட்சியின் சார்பில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவால் எனது பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நிலையில், அரச தரப்பினர் எதிர்க்கட்சியின் பரிந்துரையாக எமது கட்சி எம்.பியான மயந்த திஸாநாயக்கவின் பெயரை பரிந்துரை செய்துள்ளார்கள்.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையில் அரச தரப்பினர், அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக் குழு தலைவராக மயந்த திஸாநாயக்கவை நியமித்துள்ளனர். இதில் எமக்கு தனிப்பட்ட பிரச்சினைகள் ஏதும் இல்லை; இவ்விடயத்தில் அரசாங்கம் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியுள்ளது என்றார்.

# எம்.பிக்கள், அமைச்சர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

எம்.பிக்களின் சம்பளத்தில் 90,000 ரூபாயும் அமைச்சர்களின் சம்பளத்தில் 2,41.000 ரூபாயும் வருமான வரியாக அறவி டப்பட்டு வருவதாக தெரிவித்த சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அதிகரித்த வரி அறவீட்டால் அமைச்சர்களும் எம்.பிக்களும் கூட பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதியின் கட்டளை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையை நிவர்த்தி செய்வதற்காக மக்கள் மட்டுமின்றி அமைச்சர்கள், எம்.பிக்களான நாமும் பெரும் அர்ப்பணிப்புகளை மேற்கொள்கின்றோம்.

நான் சபை முதல்வராக செயற்பட்டும் சம்பளத்தில் சிறிதளவுதான் எனக்கும் கிடைக்கின்றது. அரசியல் நோக்கத்திற்காக எவரும் விமர்சனங்களை மேற்கொள்ள முடியும். எனினும் நாம் இரவு பகல் என பாராது மக்களின் இயல்பு வாழ்க்கையை தோற்றுவிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம் என்றார்.






காரைதீவில் கலந்துரையாடல்

# யானைகளிடம் இருந்து பாதுகாப்பது எப்படி?

■ நூருல் ஹுதா உமர்

எதிர்வரும் காலங்களில், காரைதீவு பிரதேசத்தில் காட்டு யானைகளால் சொத்துகள், பயிர்கள், தொழில் நிலையங்கள் போன்றனவற்றில் ஏற்படும் பாதிப்புகளை குறைத்தல் மற்றும் உயிராபத்துகளைத் தடுத்தல் எனும் கருப்பொருளிலான கலந்துரையாடல், காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில்,காட்டு யானைகளின் தாக்கத்துக்கு முகம்கொடுக்கின்ற 09 பிரிவுகளினதும் கிராம சேவகர்கள் (காரைதீவு-01,06,07,10,11,12, மாளிகைக்காடு மேற்கு, மாவடிப்பள்ளி கிழக்கு, மாவடிப்பள்ளி மேற்கு) சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.



முஸ்லிம் எயிட்டினால்

## கற்றல் உபகரணங்களும் சைக்கிள்களும் கையளிப்பு



■ ஹஸ்பர்

சர்வதேச மனிதநேய அமைப்பான 'முஸ்லிம் எயிட் நிறுவனம்' ஊடாக, கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், சைக்கிள்கள் என்பவற்றை கிண்ணியா காக்காமுனை அரசினர் முஸ்லிம் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்வானது நேற்று முன்தினம் (22) நடைபெற்றது. திருகோணமலை மாவட்டத்தில் மூன்று கல்வி வலயங்களில் 11 பாடசாலைகள் இத்திட்டம் மூலம் பயனடைந்தன. இதன் போது புதிதாக அமைக்கப்பட்ட நீர் சுகாதார கூடங்கள், பாடசாலை தோட்டங்கள், தளபாடங்கள் போன்றன பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி திஸாநாயக்க, மாகாண கல்வி பணிப்பாளர் அஹிலா கனகசூரியம், முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் பைசர்கான், கிண்ணியா வலயக் கல்வி பணிப்பாளர் ஏ. நசூகர்கான், முஸ்லிம் எயிட் லண்டன் நாட்டின் கண்காணிப்பு மதிப்பீட்டு முகாமையாளர் பௌலா றெயீஸ், நிகழ்ச்சித் திட்ட அலுவலர் சார்லொட் டெயிலர் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

## மோதலில் முடிந்த வீதி கிரிக்கெட் விளையாட்டு

### மூவர் வைத்தியசாலையில் அனுமதி

■ பாறுக் ஷிஹான்

வீதி கிரிக்கெட் விளையாட்டால் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் காயமடைந்த மூவர், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது: கல்முனை, கடற்கரைப்பள்ளி வீதியை ஊடறுத்துச் செல்லும் குறுக்கு வீதியில், சில இளைஞர்கள் ஒன்றிணைந்து கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபடுவது வழமை. இவர்களற் வீதியில் விளையாடுவதால், பாதசாரிகளுக்கு அசௌகரியமும் அப்பகுதியில் இடையூறுகளும் ஏற்பட்டு வந்துள்ளன.

இதனை நிறுத்துமாறு, அருகில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர், வீதியில் கிரிக்கெட் விளையாடியவர்களிடம் தெரிவித்துள்ளார்கள். இதனால் இங்கு கைகலப்பு ஏற்பட்டு, கத்தி வெட்டும் இடம்பெற்றுள்ளதாக அருகில் இருந்தவர்கள் தெரிவித்தனர். இம்மோதலில் மூன்று பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



காத்தான்குடி நகர சபையின்

## புதிய உறுப்பினராக ஆசிரியை ஜெசிமா நியமனம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

காத்தான்குடி நகர சபையின் புதிய உறுப்பினராக ஆசிரியை ஜெசிமா, கடந்த திங்கட்கிழமை (20) சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டு, தனது நியமனத்தை தவிசாளர் எஸ்.எச் அஸ்பரிடமிருந்து பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில், நகர சபை உறுப்பினர் சல்மா ஹம்சா வும் கலந்து கொண்டார்.

காத்தான்குடி நகர சபை உறுப்பினர் அலி சப்ரி, தொடர்ச்சியாக சபை அமர்வுகளில் கலந்து கொள்ளாததனால், வெற்றிடமான அவர் பதவியை, பட்டியலில் அடுத்த வேட்பாளருக்கு, தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியால் வழங்கப்பட்டது.



பொத்துவிலில்

## நெல், நிலக்கடலை அறுவடை விழா

■ எஸ். கார்த்திகேசு

பொத்துவில் பிரதேசத்தில், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன திட்டத்தின் ஊடாக விதைக்கப்பட்ட நெல், நிலக்கடலை என்பன அறுவடை செய்யப்பட்டது.

இந்நிகழ்வானது, பொத்துவில் விவசாய விரிவாக்கல் நிலைய பொறுப்பதிகாரி எஸ். நிர்மதன், விவசாய போதனாசிரியர் என். என் சித்தாரா ஆகியோரின் ஒழுங்மைப்பில் நடைபெற்ற நிகழ்வில் பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எப்.ஏ சனீர் உட்பட துறைசார் அதிகாரிகளும் கலந்து கொண்டு இருந்தனர்.

பொத்துவில் றொட்டைப் பிரதேசத்தில், 10 ஏக்கர் நிலப்பரப்பில் வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.



கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு

## புதிய நிர்வாக சபை

■ பாறுக் ஷிஹான்

சுமார் 40 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2023/2024 ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம், கல்முனை மாவட்ட நீதவான் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் (22) நடைபெற்றது.

நடப்பு வருடத்துக்கான நிர்வாகத் தெரிவில், தலைவராக சட்டத்தரணி எம்.ஐ றயிசூல் ஹாதியும் செயலாளராக சட்டத்தரணி ரோசன் அக்தரும் பொருளாளராக சட்டத்தரணி பிறேம் நவாத் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன், இதர பதவி நிலைகளுக்கும் ஏனைய நிருவாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.



# வனவளம், வனஜீவராசிகள் திணைக்களங்களின் ஆக்கிரமிப்பில் பொது மக்களின் 5,764 ஏக்கர் காணிகள்

■ மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவள திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் என்பன ஆக்கிரமித்துள்ள 5,764 ஏக்கர் காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் (22) நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடல், அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றபோது, கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலாளர்கள், வனஜீவராசிகள் திணைக்களம், வனவள திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடல் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கும்போது கூறியதாவது:

ஜனாதிபதி செயலகத்தின் சமூக விவகார பணிப்பாளர் நாயகம், இந்த விடயம் தொடர்பில் ஆராய, எமது மாவட்ட செயலகத்துக்கு கள விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அதனுடைய தொடர்ச்சியான நடவடிக்கையாக, குறிப்பாக வனவள திணைக்களத்துக்கு உட்பட்ட காணிகள், வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு உட்பட்டதான காணிகள் என்பன, பொதுமக்கள் தேவைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்ற காணிகள் மற்றும் எதிர்வரும் காலங்களில் அபிவிருத்திக்கு தேவையான காணிகள் என அடையாளம் காணப்பட்ட காணிகள் என்ற அடிப்படையிலே அவற்றை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் தொடர்ச்சியாக இடம்பெற்ற வருகின்றது.

அந்தவகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 5,764 ஏக்கர் காணியை இரண்டு திணைக்களங்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம். குறிப்பாக, மக்களுடைய வதிவிடம், பயிர்ச்செய்கைக் காணிகள், ஏனைய அபிவிருத்திக்கான காணிகள் என இந்த விடயங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இதன் மூலமாக மக்களுக்கு அந்தக் காணிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றோம் என்றார்.

## யாழ்ப்பாணக் கல்லூரியின் திரிசாரணர் இருவருக்கு 'பேடன் பவல் விருது'

■ எம். றொசாந்த்

சாரணர் இயக்கத்தின் இளைஞர் சாரணிய பிரிவாக செயற்படும் திரிசாரணர் பிரிவில் வழங்கப்படுகின்ற உயரிய விருதான 'பேடன் பவல் விருது' 57 வருடங்களின் பின்னர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் திரிசாரணர்கள் இருவருக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

சாரணர் இயக்கத்தின் தந்தையாகிய பேடன்பவல் பிரபுவின் பிறந்த தினத்தை ஒட்டி, இலங்கை சாரணர் சங்கத்தால் மாத்தளை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட நிகழ்விலேயே, இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர் குறித்த விருதுகளை, யாழ்ப்பாணக் கல்லூரியின் திரிசாரணர் குழுவில் சிறப்பாக செயற்பட்டு, அனைத்து தகைமைகளையும் நிறைவு செய்த யோ. சுதர்சனன், ப. சாரங்கன் ஆகியோருக்கு வழங்கினார்.

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி தனது 200ஆவது ஆண்டை இவ்வருடம் கொண்டாடும் நிலையில், இவ்விருது 57 வருடங்களுக்குப் பின்னர் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



## வறுமையால் கஞ்சா கடத்திய 19 வயது குடும்ப பெண் கைது

### கணவன் விட்டுச்சென்ற நிலையில் கைக்குழந்தையுடன் திண்டாட்டம்

■ செ. கீதாஞ்சன்

கணவன் இல்லாத நிலையில், வறுமையில் வாழ்ந்து வந்த 19 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய், 5,000 ரூபாய் பணத்துக்காக கஞ்சா கடத்தி, பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புதறிகுடா கிராமத்தைச் சேர்ந்த இளம் தாயார், கணவனை பிரிந்த நிலையில் வறுமையில் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில், கஞ்சாக கடத்தல் கும்பல் ஒன்றுடன் ஏற்பட்ட தொடர்பு காரணமாக, புதன்கிழமை (22) முள்ளியவளையில் இருந்து கொக்குளாய்க்கு கஞ்சா பொதியைக் கொண்டுசென்று கொடுத்தால், ஐயாயிரம் ரூபாய் கொடுப்பதாக தெரிவித்த கஞ்சா வியாபாரிகள், குடும்ப பெண்ணிடம் 100 கிராம் கஞ்சாவைக் கொடுத்துள்ளார்கள்.

குறித்த பெண், முள்ளியவளையில் பஸ் ஏறி, கொக்குளாய் செல்வதற்காக சிலாவத்தை சந்தியில் இறங்கி, பஸ்ஸூக்காக காத்திருந்த வேளை, கஞ்சா கடத்தல் தொடர்பில் சிறப்பு அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, சிறப்பு அதிரடிப்படையினர் பெண்ணை சோதனை செய்தபோது கஞ்சா பொதி கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, கைக்குழந்தையுடன் இருந்த பெண் கைதுசெய்யப்பட்டு முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொலிஸார், பெண்ணையும் சான்று பொருளையும் நேற்று (24) முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.



## வீடுக்குள் புகுந்த யானை

■ நடராஜா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, கல்மடு கிராமத்தில் நேற்று முன்தினம் (22) அதிகாலை, யானை ஒன்று வீடொன்றுக்குள் புகுந்து சேதங்களை ஏற்படுத்தி உள்ளது.

அதிகாலை 3.50 மணியளவில் கல்மடு குளத்து வாய்க்கால் பக்கம் இருந்து குடிமனைப் பகுதிக்குள் வந்த யானை தென்னை, வாழை, கரும்பு என்பவற்றை அழித்தபடி, வீடொன்றுக்குள் இரும்பு கேற்றை பிரட்டியபடி புகுந்து, வீட்டின் முன்பகுதியைச் சேதப்படுத்தி உள்ளது.

யானை வருகை தந்த போது வீட்டில் ஏழு பேர் உறங்கிக் கொண்டிருந்தனர். வீட்டில் இருந்தவர்கள் எழுப்பிய அவலக் குரலையடுத்து,யானை காட்டை நோக்கி நகர்ந்துள்ளது. சம்பவம் தொடர்பாக,கிராம அலுவலரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜேர்மன் பிரஜைக்கு சொந்தமான

## பரந்தன் காணியை ஆக்கிரமிக்க முயன்ற பெண்

### கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் இருவரும் துணை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பரந்தன் பகுதியில் உள்ள ஜேர்மன் பிரஜைக்கு சொந்தமான குடியிருப்பு காணியை, கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் இருவரின் துணையுடன் பெண்ணொருவர் ஆக்கிரமிக்க முயன்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பரந்தன் மூன்றாம் ஒழுங்கை பகுதியில், வசித்து வந்த குறித்த நபர், யுத்தம் காரணமாக ஜேர்மன் நாட்டுக்கு புலம்பெயர்ந்து வசித்து வந்த நிலையில், 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் போது, தனது காணிக்கான ஆவணங்களுடன் கண்டாவளை பிரதேச செயலகத்தில் தனது பதிவுகளை மேற்கொண்டிருந்தார். இந்த நிலையில், அப்பகுதியை சேர்ந்த பெண் ஒருவர், குறித்த காணியை அடாத்தாக பிடிக்க முயன்ற போது, காணி உரிமையாளரால் பிரதேச செயலாளர், காணி உத்தியோகத்தர், கிராம அலுவலர் ஆகியோரிடம் முறைப்பாடுகளை செய்திருந்தார். இந்நிலையில், விசாரணைகளின் போது, காணியை ஆக்கிரமித்த பெண் எந்த ஆவணங்களையும் சமர்ப்பிக்காத நிலையில், பிரதேச செயலகத்தால் குறித்த பெண்ணை வெளியேறுமாறு தெரிவிக்கப்பட்டதையடுத்து காணியை விட்டு வெளியேறியிருந்நார்

ஜேர்மனியிலிருந்து வந்த காணி உரிமையாளர், நீண்ட நாள்களாக யாரும் குடியிருக்காத குறித்த காணியை ஞயிற்றுக்கிழமை (19) துப்புரவு செய்யும்போது, அடியாட்களுடன் சென்ற குறித்த பெண், வன்முறையில் ஈடுபட்டதால் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது. அத்துமீறி, காணியை ஆக்கிரமிக்க முயன்ற பெண்ணுக்கு, காணியை பெற்றுக் கொடுப்பதற்கு கரைச்சி பிரதேச சபையின் இரண்டு உறுப்பினர்கள், முகநூலில் கருத்துகளை வெளியிட்டு, அரசியல் இலாபம் தேட முற்பட்டமையானது பெரும் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியுள்ளது.

# அமெரிக்காவின் உதவி பெரும் வரப்பிரசாதம்

## அமெரிக்கத் தூதுவரிடம் வேலாயுதம் ருத்திரதீபன் தெரிவிப்பு

■ நடராஜா மலர்வேந்தன்

இன்றைய பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் அமெரிக்காவின் பொருளாதார மற்றும் மனிதநேய உதவிகள் இலங்கைக்கு பெரும் வரப்பிரசாதமாகும் என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாக செயலாளரும், தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் உப தலைவரும், புலம்பெயர் தொழிலாளர் முன்னணியின் தலைவரும், முன்னாள் ஊவா மாகாண சபை உறுப்பினருமாகிய வேலாயுதம் ருத்திரதீபன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குடன் நுவரெலியா கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற சந்திப்பின்போது வேலாயுதம் ருத்திரதீபன், பவர் நிறுவனத்தின் தேசிய அமைப்பாளர் முனுசாமி முத்துகுமார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகர் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின்போது, மலையக மக்களின் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்தும் அவர்களின் நிலை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மலையக தொழிலாளர்களின் இன்றைய வாழ்வாதார, பொருளாதார நிலை, மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, பெண் தலைமைத்துவங்களின் வாழ்வாதார



விருத்தி, மலையக பெண் அரசியல் தலைமைத்துவங்களை மேம்படுத்தல், இளைஞர் யுவதிகளுக்கான தொழில் அபிவிருத்தி செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அத்தோடு, 200 வருட பாரம்பரியத்தை கொண்ட மலையக மக்களுக்கு சொந்த காணி உரிமை, வீட்டுரிமை, தொழிலுரிமை, தொழிலாளர் சட்டங்களில் இன்றைய காலகட்டத்திற்கேற்ப தேவையான அபிவிருத்தியும் மாற்றங்களும் மலையக தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக அமெரிக்க நிறுவனம் (American Center) ஒன்றை மலையகத்தில் ஆரம்பிப்பதற்கான வேண்டுகோளும் முன்வைக்கப்பட்டது.

மலையக இளைஞர்களின் தொழில் திறமைகளை அபிவிருத்தி செய்யவும் பொருளாதார நிலையை கட்டியெழுப்பவும் தொழிற் பயிற்சி, தொழில் பட்டறைகள், தொழில் மூலதனம் வழங்குதல், தொடர்ந்தும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் ஊடாக இலங்கை மாணவர்களின் நலன் கருதி பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஒருவேளை உணவு வழங்கும் திட்டத்திற்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

மலையக பகுதிகளில் இருந்து வெளியிடங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் தொழிலுக்காக செல்லும் பெண்களின் தொழிற் பாதுகாப்பு மற்றும் உடல் உள ரீதியான பாதுகாப்பு, தொழிற் சட்டங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டுமெனவும் ஆலோசிக்கப்பட்டது.

மலையக இளைஞர், யுவதிகள் பொருளாதார சூழ்நிலை காரணமாக நாட்டிற்குள்ளும் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து கட்டட வேலைகளுக்கும் வேறு சில ஆபத்தான தொழில்களுக்காகவும் செல்பவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல், தொழில் உரிமைகளை பாதுகாத்தல், காப்புறுதி வழங்கப்படுதல் தொடர்பாகவும் அடிப்படை சட்டங்கள் மற்றும் மனித உரிமை சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுதல் ஆகிய விடங்கள் தொடர்பாகவும் இருதரப்பினருக்கு இடையிலான கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நடமாடும் வைத்திய சேவை

■ என். ஆராச்சி



தேசிய முதியோர் செயலக காரியாலயத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் வாழும் முதியோருக்காக நடத்தப்படும் நடமாடும் வைத்திய சேவை, தெரணியகலை மாகல கனிஷ்ட வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

# கழிவுகளை மலைக்கு கொண்டு செல்லாதீர்கள்

■ கெ.தீ.பெருமாள்



சிவனொளிபாதமலை பருவகாலம் இம்முறை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல், பெப்ரவரி 22 ஆம் திகதி வரையிலும் சிவனொளிபாத மலைக்கு வந்த யாத்திரிகர்கள் விட்டு சென்ற 8 தொன் எடையுள்ள உக்கா கழிவு பொருட்கள் அனைத்தும் அகற்றப்பட்டன என மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளர் சிவராம் ராஜவீரன் தெரிவித்தார்.

கடந்த வாரம் மட்டும் சுமார் 3 இலட்சம் பேர், சிவனொளிபாத மலைக்கு தரிசனம் செய்ய வருகைதந்தனர். நல்லத்தண்ணி சிவனொளிபாத வழி வீதியின் இரு புறங்களிலும் வீசியெறிந்துள்ள இந்த உக்கா கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டு, ரிக்காடன் கிராமத்தில் உள்ள கழிவுகள் சேகரிக்கும் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சிவனொளிபாதமலை பருவகாலத்தில் உக்கா கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு பல லட்சம் ரூபாய் பணத்தை விரயம் செய்ய வேண்டி உள்ளது. அந்தச் செலவு மஸ்கெலியா பிரதேச சபைக்கு பாரிய இழப்பாகும்.

தரிசனம் செய்ய வரும் யாத்திரிகர்கள் கழிவுப்பொருட்களை நல்லத்தண்ணி நகரில் இருந்து மலைக்கு செல்லும் வழிகளில் வீசாமல், மலை அடிவாரத்தில் மற்றும் நகரில் உள்ள குப்பை தொட்டிகளில் போடும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள் என்றார்.

அத்துடன், குப்பைகளை மலைக்கு கொண்டு செல்ல வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.



# பல கோரிக்கைகளை முன்வைத்து வைத்தியாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

பல கோரிக்கைகளை முன்வைத்து வைத்தியசாலைக்களுக்கு முன்பாக ஊழியர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மலையகத்தை பொறுத்தவரையில், கிளங்கன்- டிக்கோயா, நாவலப்பிட்டி, நுவரெலியா, பதுளை உள்ளிட்ட பிரதான வைத்தியசாலையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஊழியர்களின் போராட்டம் காரணமாக, வைத்தியசாலை நடவடிக்கைகள் நேற்று (23) காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பாதிக்கப்பட்டிருந்ததாக வைத்தியர்கள் தெரிவித்தனர். மருந்துகள் மற்றும் உபகரணங்களின்

> **மலையகத்தை பொறுத்தவரையில், கிளங்கன்– டிக்கோயா, நாவலப்பிட்டி, நுவரெலியா, பதுளை உள்ளிட்ட பிரதான வைத்தியசாலையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது**

பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல், சத்திரசிகிச்சைகளை தொடர்ந்து செய்தல், வங்கியின் அநியாயமான உயர் வட்டி வீதத்தைக் குறைத்தல், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ருக்ஷான் பெல்லானாவை தேசிய வைத்தியசாலையிலிருந்து நீக்குதல், அனைத்து ஊழியர்களுக்கும் பணவீக்கம் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவுகளை வழங்குதல் ஆகிய கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

சுகாதார பணியாளர்கள் பற்றாக்குறையை தீர்க்க நடவடிக்கை எடுத்தல், முறையான இடமாற்றங்களை வழங்குதல், அநியாய வரி விதிப்பை நீக்குதல், கூடுதல் நேர வரம்பு சுற்றறிக்கையை நீக்குதல், வாரத்திற்கு ஐந்து நாள் வேலை வழங்குதல், அதிகரித்த மின் கட்டணத்தை குறைத்தல், தேவையான பணியாளர்களை பணிக்கமர்த்துதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.



# 4 நகரங்களில் முட்டைக்கு கடும் தட்டுப்பாடு

■ ஆ.ரமேஸ்.



நுவரெலியா கந்தப்பளை, இராகலை, உடப்புஸ்ஸலாவை ஆகிய பிரதான நான்கு நகரங்களில் கடந்த இரண்டு தினங்களாக முட்டைக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதன் காரணமாக வெதுப்பகங்கள், ஹோட்டல்களில் முட்டைகள் பாவித்து செய்யப்படும் உணவு வகைகள் மற்றும் வெதுப்பி உணவு வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிர்ணய விலையில் முட்டைகள் விற்பனை செய்யப்படும் போதிலும் முட்டைகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த நிலையில் நுகர்வோரும் தங்களது வீட்டு சமையலுக்கு முட்டைகள் பெற்று செல்வதில் சிரமப்படுகின்றனர்.

அதேநேரத்தில், இராகலை, உடப்புஸ்ஸலாவ பிரதான நகரங்களில் ஒரு சில சில்லறை கடைகள் மற்றும் கோழி இறைச்சி விற்பனை நிலையங்களில் வெள்ளை நிற முட்டை ஒன்று 55 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இருப்பினும் வெள்ளை முட்டை நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவது தொடர்பில் நுவரெலியா மாவட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவித்த போதிலும் உரிய நடவடிக்கை எடுத்ததாக தெரியவில்லை என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

# சத்துணவு வேலைத்திட்டம் மார்ச் 1 ஆரம்பமாகும்

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பராமரிக்கப்படும் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.



மேற்படி இலவச உணவு திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக 15 ஆயிரம் சிறார்கள் பயன்பெறுவார்கள்.

உலக சுகாதார அமைப்பு, உலக உணவுத் திட்டம் ஆகியவற்றின் பரிந்துரைகளுக்கமைய, சுகாதார மருத்துவ அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ், சுகாதார பரிசோதகர்கள் மற்றும் தோட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான முழுமையான பங்களிப்பை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனம் வழங்குகின்றது.

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், மக்கள் மத்தியில் பட்டினி சதவீதமும் அதிகரித்துள்ளது. மலையகத்தில் இந்நிலைமை மோசமாகவுள்ளது. அத்துடன், சிறார்கள் மத்தியில் போஷாக்கின்மை பிரச்சினையும் காணப்படுகின்றது.

இவற்றை நிவர்த்தி செய்யும் ஒரு நடவடிக்கையாகவே அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய, இலவச சத்துணவு வேலைத்திட்டம் சிறார்களுக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உட்பட சர்வதேச அமைப்புகள், மகளிர் விவகார மற்றும் சிறுவர் விவகார அமைச்சு வெற்றிகரமாக வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று பிரஜா சக்தி அபிவிருத்தி திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் ஷான் அருள்சாமி தெரிவித்தார்.



# மத்திய மாகாண சர்வமத சம்மேளன அமர்வு

■ மொஹொமட் ஆஸிக்

மத்திய மாகாண சர்வமத சம்மேளனத்தின் வருடாந்த அமர்வு கண்டி கெட்டம்பே 'ஒக்-ரே' ஹோட்டலில் இடம்பெற்றது. இதில் இந்து, இஸ்லாம், பௌத்த, கிருஸ்தவ மதத் தலைவர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

கண்டி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் ஏ.எம்.எல்.பி பொல்கொல்ல தலைமையில் இடம்பெற்ற இந்த அமர்வில் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், மல்வத்தை பீடத்தின் அநுநாயக்க வண.நியங்கொட விஜித்தசிறி தேரர் உட்பட மத்திய மாகாணத்தை சேர்ந்த பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதகுருக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இந்த அமர்வை, தேசிய சமாதான பேரவை, கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு என்பன இணைந்து ஒழுங்கு செய்திருந்தன.

நாட்டில் இன்றைய தேவையைக் கருதி, இவ்வாறான சம்மேளக் கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்படுவது அவசியம் என கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது, வண. நியங்கொட விஜித்தசிரி தெரிவித்தார்.

மேற்படி சம்மேளன அமர்வில் அமைதி, சமாதானம் தொடர்பாக பொதுமக்களை விழிப்படையச் செய்ய வேண்டும் என்றும் இதற்கு மதத் தலைவர்களின் பங்களிப்பு தவிர்க்க முடியாதது என்றும், அதற்காக சகல மதத் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

# ஐஸ்லபி லொறி விபத்தில் பெண்கள் உட்பட 21 பேர் காயம்

பண்டாரவளை - கிரிஒருவ வீதியில் ஐஸ்லபி பிரதேசத்தில் லொறியொன்று, வீதியின் குறுக்காக புரண்டு விபத்துக்கு உள்ளானதில், அந்த லொறியில் பயணித்த தொழிலாளர்கள் 21 பேர் காயமடைந்துள்ளனர்.

அவர்களில் பெண் தொழிலாளர்கள் 19பேரும் ஆண் தொழிலாளர்கள் மூவரும் அடங்குகின்றனர். லொறியின் சாரதியும் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் (22) மாலை இடம்பெற்ற இவ்வனர்த்தத்தில் கடும் காயங்களுக்கு உள்ளான பெண்கள் எழுவர் மேலதிக சிகிச்சைகளுக்காக தியத்தலாவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பண்டாரவளை சென்ஜேன் தோட்டத்தில் வேலையை முடித்துக்கொண்டு, தோட்டத்தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு திரும்பிக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# வீதிகள் தொடர்பில் சாரதிகளுக்கு தெளிவூட்டல் அவசியம்

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற விபத்துகளில், ஆபத்தான விபத்துகள், வளைவுகள் நிறைந்த மலையகத்திலேயே இடம்பெற்றுள்ளன. எந்த வீதியாக இருந்தாலும் சரி, உயிர்களைக் காவுக்கொள்ளும், சொத்துகளுக்கு சேதத்தை விளைவிக்கும் விபத்துகள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கைகளை எடுப்பதே சிறந்தது.

பிரதான நகரங்கள் இருக்கும் பிரதேசங்களுக்கு அப்பால், வடக்கு, கிழக்கில் இடம்பெறும் வாகன விபத்துகளின் எண்ணிக்கையும் அதிகமாகும். பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் இடம்பெறும் விபத்துகளாலும் உயிர்கள் அடிக்கடி காவுக்கொள்ளப்படுகின்றன.

ஒருசில நிமிடங்கள் தாமதிக்க முடியாமல், வாகனங்களைச் செலுத்தி விபத்துக்குள் சிக்கிக்கொள்வோரும் இருக்கத்தான் செய்கின்றனர். அதிவேகத்தில் பயணித்து விபத்துகளில் சிக்கிக்கொள்வோரும் உள்ளனர்.

இந்நிலையில், வீதியின் தன்மையை அவதானிக்காது, அதிக வேகத்தில் வாகனங்களை செலுத்துதல், வளைவுகளை கவனிக்காமல் விடுதல் உள்ளிட்டவையால் விபத்துக்குள் சிக்கிக்கொள்ளும் சாரதிகளும் இருக்கத்தான் செய்கின்றனர்.

நுவரெலியா-ரதெல்ல குறுக்கு வீதியில் இடம்பெற்ற விபத்தில் எழுவர் மரணமடைந்தனர். பலரும் கடுங்காயங்களுக்கு உள்ளாகினர். அதன்பின்னர் தற்காலிகமாக மூடப்பட்ட அந்தக் குறுக்குவீதி இலகுரக வாகனங்கள் பயணிப்பதற்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. எனினும், விவரங்களை அறியாத சாரதிகளும், குறுகிய நேரத்தில் செல்ல அவதிப்படுவோரும் அந்த வழியை பயன்படுத்தக்கூடும். ஆகையால், அவற்றைத் தடுக்கும் வகையில் தடுப்புகளை அமைப்பது கட்டாயமாகும். அதற்கான ஏற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டும்.

இந்நிலையில், சிவனொளிபாதமலைக்கு சுற்றுலாச்சென்று திரும்பிக்கொண்டிருந்த பஸ்ஸொன்று பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் மரணமடைந்தனர்; பலர் காயமடைந்தனர். ஆக, வெளிமாவட்டங்களில் இருந்து சுற்றுலா வருகின்ற வாகனங்களில் சில வாகனங்கள், இவ்வாறு பாரிய விபத்துகளுக்குள் சிக்கிக்கொள்கின்றன.

இந்நிலையில்தான், ரதெல்ல விபத்து தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கும் விமல் வீரவங்சவுக்கும் இடையில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (22) கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. வீதி விபத்துகளை தடுப்பது தொடர்பிலான வேலைத்திட்டங்கள் தொடர்பிலான தரவுகளை முன்வைக்க அமைச்சர் பந்துல முயன்றார்.

குறுக்கிட்ட வீரவன்ச, வீதி விபத்துகள் தொடர்பில் அமைச்சின் விசேட கூற்றை முன்வைத்தால், பாராளுமன்றத்தில் வேறு வேலைகளைச் செய்யமுடியாமல் போகும் என்றார்.

ரதெல்ல விபத்து பாரிய விபத்தாகும். அங்கு ஏழுவர் மரணித்துள்ளனர் என பந்துல சுட்டிக்காட்டிய வேளை, மனித உயிர்களை காவுக்கொள்ளும் ஒவ்வொரு விபத்தும் பாரிய விபத்தாகும் என்றார் வீரவன்ச.

வீதிகளில் முன்னால் செல்லும் வாகனத்தை நேரத்துக்கு முந்த வேண்டும் என்ற எண்ணத்தில் அவதானக்குறை, எதிர்த்திசையில் வரும் வாகனத்தின் வேகத்தை கணிக்கத் தவறுதல் போன்றவற்றால் விபத்தில் சிக்கிக்கொள்கின்றனர். சபையில் நேரத்தை ஒதுக்காமையால், விபத்துகளை தடுப்பது குறித்து ஆராயமுடியவில்லை என்பதே எமது அவதானிப்பதாகும். என்றாலும், தத்தமது இடங்களில் இருந்து வேறு பிரதேசங்களுக்கு பயணிக்கும் போது, வீதிகள் தொடர்பில் தெளிவுபெறல் சாரதிகளுக்கு அவசியமாகும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்



www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

கூண்டுக்குள் பிறந்த குயில்கள், பறக்கும் நிலை வந்ததுமே வெளியே வந்து இசைக்க ஆரம்பித்து விடுகின்றன.

அவைகளால் அடைபட்டு இருக்க முடியாது. திறமைசாலிகள் அடங்கிப்போவதில்லை.

எந்த விடயத்தில் ஆர்வம் உள்ளதோ அதனைக் கைப்பற்றி விடுங்கள். பிடிக்காத விடயங்களில் முன்னேறுவது கஸ்டம். சிலருக்கு பிடிக்காத விடயம் ஏதாவது இருந்தாலும், தொடர்ந்து அதே கருமத்தைச் செய்யும் போது அதுவே பிடித்துப் போவதும் உண்டு.

சிரத்தையுடன் செய்யும் எந்தக் கருமமும் சிறப்பானதாகவே அமையும். வேண்டா வெறுப்பாக எதையும் செய்தால் காரிய சித்தி எப்படி இருக்கும்?

திறமைகள் மேலோங்க பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். போராடாமல் எதுவும் நடக்காது.

படிக்க சிரமப்படுபவர்கள் தொடர்ந்து கல்வி பயின்று உயர் நிலைக்கு வருகின்றனர். வெறும் கனவுகளால் எதுவும் நடக்காது. அதனை நனவாக்க கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும்.

முயற்சி செய்யும் போது அதுவே எமக்குப் பிடித்தும் விடுகின்றது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### உயிர்கள் அழியும் முன்
## பாலத்தை புனர்நிர்மாணம் செய்யுமாறு கோரிக்கை

அம்பாறை நகரில் இருந்து பக்மிடியாவ செல்லும் வழியில் புதிதாக போடப்பட்ட கார்பெட் வீதியில் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தக்கூடிய அனர்த்தம் ஏற்படக்கூடிய வகையில் பாலங்கள் அமைந்துள்ளன.

கார்பட் வீதி அமைக்கப்படும் போது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாலத்தைப் பற்றி கவனத்தில் கொள்ளாமையே இதற்கு காரணமாக அமைந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இந்தப் பாலம் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய நிலையில் காணப்படுவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

அஸ்ஹர் இப்ராஹிம்



### வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 16:
# தென்கிழக்கு ஆசியாவின் ஆழமான வேர்கள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

தென்கிழக்கு ஆசியாவில் அதிவலதுசாரி தீவிரவாதமும் அதன் சித்தாந்த ரீதியில் உந்தப்பட்ட வன்முறையும், இன்றுவரை குறைவான கவனம் பெற்றதொன்றாகவே இருக்கிறது.

'ஆசியான்' (தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம்) பிராந்தியத்தில், அரசியல் வன்முறை என்பது, கொலனித்துவ காலத்தில் இருந்து, இடதுசாரி பயங்கரவாதம், கம்யூனிசம், போர்க்குணம் மிக்க இஸ்லாமியவாதத்தை மையமாகக் கொண்டது.

இஸ்லாமிய அரசின் (IS) தோற்றம் மற்றும் ஐ.எஸ்சுக்கும் பிராந்திய இஸ்லாமியத் தீவிரவாத குழுக்களுக்கும் இடையே வளர்க்கப்பட்ட உறவுகளால், பிராந்தியத்தின் கவனம், அல்-கொய்தா சார்பு ஜெமா இஸ்லாமியா போன்ற வன்முறை ஜிஹாதிச இயக்கங்கள் மீதேயிருந்தது.

இஸ்லாமிய பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதில் ஈடுபட்டுள்ள மேற்கத்திய நாடுகளைப் போலவே, பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போரில் ஈடுபட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளும், தங்கள் சொந்த கொல்லைப்புறத்தில் அதிவலதுசாரி தீவிரவாதத்தின் அறிகுறிகளைப் புறக்கணித்தன.

நியூசிலாந்தில் 2019 கிறிஸ்ட்சர்ச் மசூதி தாக்குதலால் ஈர்க்கப்பட்ட 16 வயது சிங்கப்பூர் இளைஞனை பொலிஸார் கைது செய்தமையானது பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஆனால், இது போன்ற அதிவலதுசாரி வன்முறை எண்ணம் கொண்டோர் கைது செய்யப்படுவது, இது முதல் முறை அல்ல.

ஜூன் 2020இல், 19 வயதான சிங்கப்பூர் குடிமகன் ஒருவர், AR-15 ரக தாக்குதல் துப்பாக்கியால் முஸ்லிம்களை சுட்டுக் கொல்லும், தனது கனவு பற்றி, தனது இன்ஸ்டாகிராமில் இடுகையிட்ட பிறகு, வன்முறையைத் தூண்டியதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். இச்சம்பவங்கள் மேற்கத்திய பாணியிலான தீவிர வலதுசாரி தீவிரவாதத்தின் திடீர் அதிகரிப்பைக் குறிப்பதாகத் தோன்றின் அது தவறானது.

பெரும்பாலான தென்கிழக்கு ஆசிய ஆய்வாளர்களும் கொள்கை வகுப்பாளர்களும் தீவிர வலதுசாரி தீவிரவாதத்தை ஏற்கெனவே இருக்கும் தீவிர இஸ்லாத்தின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் மட்டுமே பார்க்கிறார்கள். அதை 'பரஸ்பர தீவிரமயமாக்கல்' என்று அணுகுகிறார்கள்.

பாசிசத்தை, குறிப்பாக தேசிய சோசலிசத்தை பிராந்தியத்தில் ஒரு புதிய நிகழ்வாகக் கருதுகின்றனர். இது வரலாற்றின் மிகை எளிமைப்படுத்தலாகும். இது நீண்டகால தீவிரவாத போக்குகளையும் உறவுகளையும் மறைக்கிறது.

தென்கிழக்கு ஆசியா முழுவதிலும் உள்ள பல்வேறு அரசியல் மற்றும் சமூக சூழல்களைப் பொதுமைப்படுத்துவது ஆபத்தானது. அதேவேளை, நாஜி தாக்கங்கள் அல்லது பாசிச சித்தாந்தம் செல்வாக்குப் பெற முன்னரே, அதிவலதுசாரிகளின் செல்வாக்கு, இப்பிராந்தியத்தில் இருந்தது என்ற உண்மையை, ஏற்கெனவே புறக்கணிக்கப்பட்ட வரலாற்றை முற்றிலுமாக அழிக்கும் பணியைச் செய்யும் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

ஏகாதிபத்திய ஜப்பானியர்கள், 1940இல் தான் ஆளும் முகாமை ஒருங்கிணைக்க 'ஆசியாவுக்கான ஆசியர்' என்ற பான்-ஆசியக் கருத்தை பிரசாரம் செய்வதற்கும், நாஜி ஜெர்மனி, பாசிச இத்தாலியுடன் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கும் நீண்ட காலத்துக்கு முன்பே, இந்தோனேசியாவில் பாசிசக் கட்சிகள் இருந்தன.

அடல்ப் ஹிட்லர் 1933இல் ஆட்சிக்கு வந்த பிறகு, டச்சு கிழக்கிந்தியத் தீவுகளில் (இப்போது இந்தோனேசியா) உள்ள டச்சு-இந்தோ நாஜி அனுதாபிகள் பட்டேவியாவில் (இப்போது ஜகார்த்தா) *Nederlandsche Indische Fascisten Organisatie* நிறுவினர். ப்ரிபூமி (பூர்வீகவாசிகள்) உடன் சில உடன்பாடுகளைக் கண்டனர்.

பின்னர், இந்தோனேசிய அறிவுஜீவியும் ஜாவானிய பிரபுவுமான *Raden Pandji Wirasmo Notonindito* பேர்லினில் பொருளாதாரம் மற்றும் வணிகத்தில் முனைவர் பட்டம் பெற்று தாயகம் திரும்பி, இந்தோனேசிய தேசிய கட்சியில் சேர்ந்தார். ஹிட்லர் மற்றும் பெனிட்டோ முசோலினி இருவராலும் ஈர்க்கப்பட்டு, பின்னர் அவர் தனது சொந்தக் கட்சியை 1933 இல் பாண்டுங்கில், இந்தோனேசிய பாசிஸ்ட் கட்சியை நிறுவினார். ஜாவா மக்களுக்கான அரசியலமைப்பு முடியாட்சியின் கீழான சுதந்திரம் என்ற அதன் சித்தாந்தம் எந்த மக்கள் ஆதரவையும் பெறத் தவறியதால் கட்சி குறுகிய காலமே நீடித்தது.

ஜலசந்தியின் குறுக்கே, தாய்லாந்து இரண்டாம் உலகப் போரில் ஓர் அச்சு நட்பு நாடாக நுழைந்தது, மேலும் 1938இல் புதிதாகப் பதவியேற்ற பிரதமர் பீல்ட் மார்ஷல் ப்ளேக் பிபுன்சோங்க்ராம் கீழ் ஒரு கலாசாரப் புரட்சியினுள் நுழைந்தது. அவர் தனது இலட்சிய இராணுவவாத பாசிச அரசு என்ற கோட்பாட்டில், தாய்லாந்தை நவீனமயமாக்க முனைந்தார்.

உலகளாவிய விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கலின் சகாப்தத்தில், பாசிசம் ஆசிய சீர்திருத்தவாதிகளுக்கு அவர்கள் போட்டியிட விரும்பிய ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளைப் போலவே கவர்ச்சிகரமானதாக இருந்தது. அது தேசிய வலிமை, இராணுவ சக்தி, இன மேலாதிக்கம், கலாசார மேன்மை ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்தது.

பாசிசத்துடனான தென்கிழக்கு ஆசியாவின் ஊர்சுற்றல்கள் அங்கு முடிவடையவில்லை. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த பல தசாப்தங்களுக்குப் பிறகு, நாசிசம் தென்கிழக்கு ஆசியாவில் '*Nazi chic*' (நாஜி சிக்யைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் நோக்கலாம்) மற்றும் நவநாசிசத்தின் வடிவத்தில் எதிர்பாராத மறுமலர்ச்சியை அனுபவித்தது.

ஐரோப்பிய இரண்டாம் உலகப்போரின் அனுபவத்தின் வரலாற்று விழிப்புணர்வு இல்லாமை, பல ஆசிய பதின்ம வயதினரை நாஜி அழகியலுடன் நிலைநிறுத்துவதற்கு பங்களித்தது. நியோ-நாஜி இயக்கம் மலேசியாவின் ஹெவி மெட்டல் மற்றும் பங்க் இசைக் குழுக்களின் வழி 1990களில் இருந்து மலாய் இசைக்குழுக்களின் வடிவத்தில் தோன்றியது.

1980கள் மற்றும் 1990களின் பிற்பகுதியில் அமெரிக்க மற்றும் பிரித்தானிய இசைக் குழுக்களைப் போலவே, இந்தத் தேசிய சோசலிச இசைக்குழுக்கள் மலாய் பாசிச எதிர்ப்பு ஸ்கின்ஹெட் சமூகத்துடன் மோதல்கள் நிகழ்ந்தன.

மியான்மரில், 969 இயக்கம் எனப்படும் தேசியவாத பௌத்தக் குழு 2013 இல் ரோஹிஞ்கியா எதிர்ப்பு மற்றும் முஸ்லிம் எதிர்ப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டது.

இவ்வியக்கம் வன்முறை தந்திரோபாயங்களைக் கையாள்வதனூடு தங்களை ஒரு நவநாஜி அமைப்பாக வெளிப்படையாகவே அறிவித்தார்கள். அதேபோன்று தாய்லாந்தில், ஒருபுறம் கடுந்தேசியவாத பௌத்த துறவிகள் இஸ்லாமிய வெறுப்புக் கதைகளுக்கு செயல்வடிவம் கொடுத்தார்கள். இதற்கு எதிர்வினையாக மறுபுறம் தேசிய புரட்சிகர முன்னணி (வடக்கு மலேசியாவில் உள்ள இஸ்லாமிய பதானி விடுதலை இயக்கம்) தென் தாய்லாந்தில் உள்ள பௌத்த மதகுருமார்களை குறிவைத்தது.

தென்கிழக்கு ஆசியாவில் இருக்கும் தீவிர வலதுசாரி, மாற்று வலதுசாரி இயக்கங்கள், பிராந்தியத்தில் வாழும் மக்களைப் போலவே பன்முகத்தன்மை கொண்டவை; வேறுபட்டவை என்பதை அங்கிகரிப்பது முக்கியம்.

இதன் ஒரு பகுதியாக, தென்கிழக்கு ஆசியாவில் அதிவலதுசாரி சித்தாந்தத்தை முன்னெப்போதும் இல்லாத ஒன்றாகக் கருதலாகாது. சில காலமாக இருந்துவரும், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே விளங்க வேண்டும்.

கம்யூனிசம் சோசலிசத்தின் மீதான பொதுவான விரோதம், முக்கியமாக ஆசியான் நாடுகளில், தீவிர வலதுசாரி மற்றும் மாற்றுவலதுசாரி கருத்துகளை சாத்தியமான பிரச்சினைகளாகக் கருதுவதை கடினமாக்குகிறது, குறிப்பாக, சமீபத்திய மேற்கத்திய தீவிர வலதுசாரி எண்ணங்களிலிருந்து பல கருத்துகள் கடன் வாங்கப்பட்டு அவை உள்மயமாக்கப்பட்டன.

இவை இஸ்லாமிய தீவிரவாதத்துக்கு பதில் 'மேற்கத்திய பாணி தீவிர வலதுசாரி தீவிரவாதத்தை' அதிவலதுசாரித்துவம் ஏற்றுக்கொண்டுள்ளது என்று முடிவு செய்யத் தூண்டுகிறது. என்றாலும், இது மேலோட்டமான விளக்கம் மட்டுமே. சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து அல்லது வேறு தென்கிழக்கு ஆசிய நாடுகள் எதுவாக இருந்தாலும், தற்போதைய அரசியலில் ஆழமாக மூழ்குவது அவசியம்.

தென்கிழக்கு ஆசியாவில் பல்வேறு நாடுகளில் இருக்கும் தீவிர வலதுசாரி இயக்கங்கள், அந்தந்த தேசங்களின் தூய்மையைப் பாதுகாக்க இன-மத அபிலாஷைகளைப் பகிர்ந்து கொள்கின்றன.

மேற்கில் உள்ள வெள்ளை மேலாதிக்க தீவிரவாதத்தைப் போலவே, இப்பிராந்தியத்தில் உள்ள இனவாதிகள், தங்கள் தாயகத்தின் சட்டபூர்வமான தன்மை மற்றும் இறையாண்மையின் மீது அதிகாரத்தை விரும்புகிறார்கள்.

உதாரணமாக, இயன் ஸ்டுவர்ட் மற்றும் அவரது ப்ளட் ரூ ஹானர் நெட்வொர்க்கால் ஈர்க்கப்பட்ட மலாய் சக்தி இயக்கம், 'நுசந்தரா ராயா' (மலாய் பவர்), மலாய் மேலாதிக்கத்தின் கருத்தை ஊக்குவிக்கிறது.

சிங்கப்பூரில், தீவிர வலதுசாரி தீவிரவாத சித்தாந்தம் எவ்வளவு ஆழமானது அல்லது பரவியது என்பது பற்றி அதிகம் அறியப்படவில்லை என்றாலும், பயங்கரவாதக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளம்பெண், ஒரு தீவிர கிறிஸ்தவரான இந்திய இனத்தைச் சேர்ந்தவராக இருந்தார். இவர்கள் எல்லோரும் தத்தம் நாடுகளில் சமத்துவத்தைக் கோரும்; சிறுபான்மையினரின் முன்னிலையில் தங்கள் இருப்பு, உயிர்வாழ்வு, சலுகை ஆகியவை அச்சுறுத்தப்படுகின்றன என்று நம்புகிறார்கள்.



# மார்ச் மாதத்தில் யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தை (JITF)

13ஆவது வர்த்தக சந்தை நிகழ்வு யாழ்ப்பாணத்தின் மையப் பகுதியான யாழ்ப்பாணக் கோட்டையை அண்மித்துள்ள முற்றவெளி மைதானத்தில் மார்ச் 3ஆம், 4ஆம் மற்றும் 5ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வு, யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்துடன் (CCIY) இணைந்து, வரையறுக்கப்பட்ட இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு சேவைகள் (தனியார்) நிறுவனத்தினால் (LECS) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாவது யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தை 2002 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டது. அன்றிலிருந்து இந்நிகழ்வு ஒரு வருடாந்த வர்த்தகத் தளமாக படிமுறை வளர்ச்சி கண்டுள்ளது. இக்கண்காட்சியில் அமைக்கப்படும் விற்பனையகங்கள் (stall) யாழ் சந்தையின் பெரும் பகுதியை அடைந்துகொள்வதை இந்நிகழ்வு சாத்தியமாக்குகிறது. இக்கண்காட்சி நடைபெறும் மூன்று நாட்களும், யாழ்ப்பாணத்தையும் வட மாகாணத்தையும் தளமாகக்கொண்டுள்ள நுகர்வோர்களும் தொழில் தரப்பினர்களும் இந்நிகழ்வை பார்வையிட வருகை தருகின்றனர். பொதுவாக, பல்வேறுபட்ட மக்கள்தொகையையும் சார்ந்த ஆயிரக் கணக்கான பார்வையாளர்கள் இங்கு வருகின்றனர். யாழ்ப்பாணக் கோட்டையை அண்மித்ததாக அமைக்கப்படும் கண்காட்சி இடமானது, அங்கு விற்பனையகங்களை அமைக்கின்றவர்கள் தமது பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான உச்சபட்ச சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

'வடக்கின் நுழைவாயில்' (gateway to the North) என அறியப்படும் யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தையானது, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் தமது தயாரிப்புக்களை வடக்கு மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக மிகவும் எதிர்பார்க்கும் ஒரு தளமாகும். கடந்தகாலங்களில் இக்கண்காட்சியில் பங்குபற்றிய தொழில்முயற்சியாளர்கள் வடக்கில் தமக்கு இருக்கக்கூடிய சாத்தியங்களை நேரடியாகக் கண்டுகொண்டனர் என நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள் குறிப்பிட்டனர்.

இந்நிகழ்வானது விவசாயம், விருந்தோம்பல், கல்வி, உணவு, இயந்திர உபகரணம், நிர்மாணம், நுகர்வோர், இலத்திரனியல், மின்சக்தி, ஆடைத்தொழில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிலைச் சொத்து (Real estate) ஆகிய துறைகளிலுள்ள கைத்தொழில்கள், தயாரிப்புக்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு பன்முக வர்த்தக விவகாரம் (multi-trade affair) பற்றியதாகும்.

நீண்டகாலமாக கல்விக்கான காட்சிக்கூடமாகத் திகழ்ந்துவருகின்ற 'கல்வி' எனும் காட்சியரங்கின் நிகழ்வுகளும் பல உயர்கல்வி நிறுவனங்களை உள்ளடக்கி இம்முறை, 2023 ஆம் ஆண்டில், இந்நிகழ்வில் இடம்பிடிக்கவுள்ளன. இக்காட்சிக்கூடமானது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்களும் இளைஞர்களும் நாடுபூராவுமுள்ள கல்வி நிறுவனங்களுடன் ஈடுபாடு கொள்வதற்கான வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தை (JITF) என்பது, இலங்கையின் MIECE நிகழ்வுகள் பற்றிய நாட்காட்டியில் காணப்படும் ஒரு முக்கிய நிகழ்வாகும். இந்த நிகழ்வின்போது இப்பிராந்தியத்துக்குப் பயணிக்கும் அதிக எண்ணிக்கையிலான கண்காட்சியாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் காரணமாக, மூன்று நாட்களைக்கொண்ட இக்கண்காட்சி, யாழ்ப்பாணத்தில் விருந்தோம்பல் தொழிற்றுறைக்கும் பொருளாதாரத்துக்கும் பாரிய உந்துசக்தியை வழங்குகின்றது. இக்காலப்பகுதியில் அநேகமான ஹோட்டல்களில் பெரும் எண்ணிக்கையானோர் தங்குகின்றனர் என்பதுடன், நிகழ்வு இடம்பெறும் மூன்று நாட்களில் விருந்தகங்களும் உள்ளூர் வியாபாரிகளும்கூட தமது விற்பனைகளில் அதிகரிப்பைக் காண்கின்றனர்.

# SLT-MOBITEL க்கு ஆசிய தொழில்நுட்ப சிறப்பு விருதுகள் 2022 ல் கௌரவிப்பு






SLT-MOBITEL க்கு ஆசிய தொழில்நுட்ப சிறப்பு விருதுகள் 2022 நிகழ்வில், பெருமைக்குரிய "வலையமைப்பு மற்றும் புரோட்பான்ட் – தொலைத்தொடர்பாடல்கள் தொழில்நுட்ப சிறப்பு விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. SLT-MOBITEL இனால் LTE 850MHz புரோட்பான்ட் தீர்வை புத்தாக்கமான வகையில் பயன்படுத்தி நாட்டின் பின்தங்கிய கிராமப் பகுதிகளுக்கும் பரந்தளவு வலையமைப்பை வழங்கியிருந்தமையை கௌரவிக்கும் வகையில் இந்த உயர் விருது வழங்கப்பட்டிருந்தது.

தேசத்தில் தற்போது முன்னெடுக்கப்படும் டிஜிட்டல் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் சிறந்த கிராமிய இணைப்புத்திறனைப் பெற்றுக் கொடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணரந்து, SLT-MOBITEL இன் புத்தாக்கமான LTE 850MHz வலையமைப்பு நாடு முழுவதிலும் கிராமிய வலையமைப்பு இணைப்புத் திறனை மேலும் மேம்படுத்துவதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு இலங்கையருக்கும் SLT-MOBITEL இன் Sub-1GHz 850MHz LTE வலையமைப்பின் அனுகூலத்தை அனுபவிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. குறிப்பாக, கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக அமுல்படுத்தப்பட்டிருந்த பிரயாணக் கட்டுப்பாடுகளுடனான காலப்பகுதியில், அனைவருக்கும் புரோட்பான்ட் இணைப்பு முக்கிய தேவையாக அமைந்திருந்த காலப்பகுதியில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

மேலும், SLT-MOBITEL இன் LTE 850MHz தீர்வினால், ஏற்கனவே பயன்படுத்தப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த தேசிய கீற்றை வளங்கள் மீட்கப்பட்டிருந்தது. வலையமைப்பு மேம்படுத்தலினூடாக மொபைல் பிரிவினால் ஏற்கனவே புரோட்பான்ட் சேவைகளுக்கு அணுகலைக் கொண்டிராத மேலதிக 700,000 வாடிக்கையாளர்களை இணைத்துக் கொள்ள முடிந்தது. LTE 850MHz நிறுவுகையுடன், SLT-MOBITEL இனால் கொவிட்-19 கட்டுப்படுத்தல் செயற்பாடுகளுக்கு மேலும் வலிமை சேர்க்க முடிந்திருந்தது. கிராமிய சமூகங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கும், வீடுகளிலிருந்து பணியாற்றுவோருக்கும், தேசிய அதிகாரத் தரப்பினருக்கும், கொவிட்-19 அவசர நிலைகளில் இயங்குவதற்கான வசதிகளை வழங்கி, இலங்கையில் காணப்பட்ட டிஜிட்டல் இடைவெளியைக் குறைத்திருந்தது.

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், SLT-MOBITEL இன் LTE 850MHz செலவுச் சிக்கனமாக புரோட்பான்ட் சேவைகளினூடாக, கல்வி, பணி, சுகாதாரப் பராமரிப்பு, தேசிய அவசர நிலைகள் போன்றவற்றில் கிராமிய சமூகங்களை மேம்படுத்துவதற்கு பெருமளவு பங்களிப்பு வழங்கப்பட்டு, அச்சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் மற்றும் புரோட்பான்ட் ஆகியவற்றை சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

5G, Metaverse, AI, Big Data மற்றும் பல அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களுக்கு இலங்கையை வழிநடத்தும் வகையில், SLT-MOBITEL இனால் தொடர்ந்தும் வலையமைப்பு உட்கட்டமைப்புகள் விரிவாக்கத்தில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், தேசத்தை அடுத்தகட்ட டிஜிட்டல் முன்னேற்றத்தை நோக்கி கொண்டு செல்லும் பணிகளும் இடம்பெறுகின்றன.

ஈரோடு

# பிரசாரத்தில் வெடித்த வன்முறை:

## தி.மு.க., நாம் தமிழர் கட்சி தொண்டர்கள் மோதல்





ஈரோடு கிழக்கு தொகுதியில் தேர்தல் களம் அனல் பறக்கும் நிலையில், நேற்று முன்தினம் இரவு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வீரப்பன்சத்திரம் பஸ் நிறுத்தம் அருகே பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். இதன்போது அங்கு வந்த திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த தொண்டர்கள் சிலர் நாம்தமிழர் கட்சியினருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர் அதற்கு பதிலடியாக நாம தமிழர் கட்சியினரும் கோஷம் எழுப்பியுள்ளனர்.

இதில் 2 தரப்பினருக்கும் இடையே கைகலப்பு, தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது நாம் தமிழர் கட்சியின் தொண்டர்கள் தாக்கியதில் தி.மு.க. தொண்டர் ஒருவரின் மண்டை உடைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த தி.மு.க.வினர் கையில் வைத்திருந்த கட்சிக்கொடி கட்டி இருந்த இரும்பு குழாய்களை வைத்து சரமாரியாகத் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதலில் 2 தரப்பை சேர்ந்தவர்களும் படுகாயமடைந்தனர்.

இத் திடீர் கலவரத்தால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து அங்கு குவிந்த பொலிஸார் 2 தரப்பினரையும் சமாதானம் செய்து, படுகாயமடைந்தவர்கைளை வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர்.



அரியானா மாநிலம்

## கொரோனா அச்சம்: 3 ஆண்டுகளுக்குப் பின்னர் தாய், மகன் மீட்பு

கொரோனாப் பரவல் குறித்த அச்சத்தில் அடுக்குமாடிக் குடியிருப்பொன்றில் தனது 11 வயதான மகனுடன் தனியாக இருந்த பெண்ணொருவர் 3 ஆண்டுகளுக்குப் பின்னர் அரியானா மாநிலம் குருகிராமத்தில் மீட்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

" தான் தனது குடும்பத்தை விட்டுப் பிரிந்து வேறு ஓர் இடத்தில் தங்கிப் பணிபுரிந்து வருவதாகவும், தனது மனைவி கொரோனா அச்சம் காரணமாக கடந்த 3 ஆண்டுகளாகத் தனது மகனுடன் வீட்டில் அடைந்திருப்பதாகவும், தன்னையும் அவர் வீட்டிற்குள் அனுமதிப்பதில்லை "எனவும் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு தேவையான பணம் மற்றும் மளிகைப் பொருட்களைத் தானே வாங்கிக் கொடுப்பதாகவும்"அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து வழக்கு பதிவு செய்த பொலிஸார் , குறித்த பெண்ணையும் அவரது மகனையும் குறித்த குடியிருப்பில் இருந்து மீட்டு வைத்தியசாலை அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில் அப்பெண்ணின் மன நிலை பரிசோதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பெங்களூர்

## திரைப்படப் பாணியில் நடத்துனர் மீது வழக்கு

நடிகர் விஜேயின் 'தமிழன்' திரைப்படப்பாணியில் நபர் ஒருவர் பஸ் நடத்துனர் மீது வழக்குப் பதிவு செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2002ஆம் ஆண்டு வெளியான குறித்த திரைப்படமானது குடிமக்களின் அடிப்படைச் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

இப்படத்தில் ஒரு காட்சியில் பஸ்ஸில் பயணம் செய்யும் பயணி ஒருவருக்கு மீதி சில்லறையைத் தராமல் நடத்துனர் அலட்சியம் செய்வார். உடனே அந்த நடத்துனர் மீது வழக்கு தொடர்ந்து நஷ்ட ஈடு கோரப்படும்.

அதேபோன்ற ஒரு சம்பவம் தான் அண்மையில் பெங்களூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

'ரமேஷ் நாயக்' என்பவர் தான் இது தொடர்பான மனுவை நுகர்வோர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனுவில் " நடத்துனரிடம் 30 ரூபாய் கொடுத்து 29 ரூபாய் பயணச்சீட்டைப் பெற்றுகொண்டதாகவும், ஆனால் நடத்துனர் 1 ரூபாய் மீதமாகத் தர மறுத்துள்ளார் எனவும், இதற்கு இழப்பீடாக 15,000 ரூபாய் தரவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றம் பாதிக்கப்பட்டவருக்கு 2,000 ரூபாய் இழப்பீடு வழங்கக் கோரி பெங்களூர் மாநகர போக்குவரத்து கழகத்திடம் உத்தரவிட்டுள்ளது.




ஐதராபாத்

## கோவிலில் கொள்ளையடித்தவர் கொலை

ஐதராபாத்தில் கோவில் ஒன்றில் கொள்ளையடிக்க முயன்ற நபர் ஒருவர் பாதுகாவலர் தாக்கியதில் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐதராபாத்தில் குஷாய்குடா பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவ தினத்தன்று குறித்த கோயிலுக்குக் கொள்ளையடிக்க வந்த கொள்ளையன் அங்கிருந்த உண்டியலை உடைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளான்.

இதன்போது அங்கு வந்த பாதுகாவலரான ரங்கையா தான்வைத்திருந்த கட்டையைக் கொண்டு கொள்ளையனின் தலையில் தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.



மும்பை

## "எனது அந்தரங்க உறுப்புகளைத் தொட்டுத் தாக்கினார் "

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் பிரித்வி ஷா. இவர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மும்பையில் ஒரு நட்சத்திர விடுதியில் தனது நண்பர்களுடன் உணவு அருந்திக்கொண்டு இருந்தபோது இன்ஸ்டாகிராம் பிரபலமும், போஜ்புரி நடிகையுமான 'ஸ்வப்னா கில்' அவருடன் செல்பி எடுக்க முயன்றுள்ளார்.

அதற்கு பிரித்வி ஷா மறுப்பு தெரிவிக்கவே, ஆத்திரமடைந்த 'ஸ்வப்னா கில்' தனது நண்பர்களுடன் சேர்ந்து பிரித்விஷாவை கடுமையாகத் தாக்கினார்.

மேலும், பிரித்வி ஷாவின் காரையும் அந்த கும்பல் அடித்து உடைத்தது. இச்சம்பவம் தொடர்பாக பிரித்வி ஷா அளித்த புகாரின் அடிப்படையில் ஸ்வப்னா கில் உள்ளிட்டோர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

அத்துடன் தாக்குதல் நடத்திய ஸ்வப்னா கில் மற்றும் அவரது நண்பர்கள் 7 பேரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் அண்மையில் பிணையில் வெளியே வந்த ஸ்வப்னா கில் கிரிக்கெட் வீரர் பிருத்வி ஷா மீது புகார் அளித்தார்.

அதில் "சம்பவ தினத்தன்று பிருத்வி ஷா குடிபோதையில் இருந்ததாகவும், தனது அந்தரங்க உறுப்புகளைத் தொட்டுத் தன்னை அவர் தாக்கியதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இதனையடுத்து ஆயுதங்கள் மூலம் தாக்கியமை, உயிருக்கு ஆபத்தை விளைவித்தமை எனப் 10 பிரிவுகளின் கீழ் பிருத்வி ஷா மீது ' ஸ்வப்னா கில்' பொலிஸாரிடம் புகார் அளித்துள்ளார்.

பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்



# முதலாமிடத்துக்கு முன்னேறிய அன்டர்சன்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு இங்கிலாந்தின் வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் முன்னேறியுள்ளார்.

நியூசிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே, இரண்டாமிடத்திலிருந்து ஓரிடத்துக்கு முன்னேறி முதலாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் இரவிச்சந்திரன் அஷ்வின், மூன்றாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி இரண்டாமிடத்தை அடைந்துள்ளார்.

இந்நிலையில், இதே டெஸ்டில் 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் இரவீந்திர ஜடேஜா, 15ஆம் இடத்திலிருந்து ஆறு இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜேம்ஸ் அன்டரசன், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. பற் கமின்ஸ், 4. ஒலி றொபின்ஸன், 5. ஜஸ்பிரிட் பும்ராஹ், 6. ஷகீன் ஷா அஃப்ரிடி, 7. ககிஸோ றபாடா, 8. கைல் ஜேமிஸன், 9. இரவீந்திர ஜடேஜா, 10. மிற்செல் ஸ்டார்க்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

மர்னுஸ் லபுஷைன், 2. ஸ்டீவ் ஸ்மித், 3. பாபர் அஸாம், 4. ட்ரெவிஸ் ஹெட், 5. ஜோ றூட், 6. றிஷப் பண்ட், 7. றோஹித் ஷர்மா, 8. கேன் வில்லியம்ஸன், 9. திமுத் கருணாரத்ன, 10. உஸ்மான் கவாஜா.

இதேவேளை மேற்படி டெஸ்டில் 74 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் அக்ஸர் பட்டேல், ஏழாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்தார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், 4. பென் ஸ்டோக்ஸ், 5. அக்ஸர் பட்டேல்.



இந்தியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான


## அவுஸ்திரேலியக் குழாமில் மக்ஸ்வெல், மார்ஷ், றிச்சர்ட்ஸன்

இந்தியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான அவுஸ்திரேலியக் குழாமில், நீண்ட காலமாக காயங்கள் காரணமாக போட்டிகளில் பங்கேற்றிருக்காத கிளென் மக்ஸ்வெல், மிற்செல் மார்ஷ், ஜையை றிச்சர்ட்ஸன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, தற்போது இந்தியாவிலிருந்து அவுஸ்திரேலியா சென்றுள்ள அணித்தலைவர் பற் கமின்ஸ், டேவிட் வோர்னர், அஸ்தன் அகர் ஆகியோரும் குறித்த குழாமில் காணப்படுகின்றனர். எவ்வாறெனினும், இவ்வாறு அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பிய ஜொஷ் ஹேசில்வூட் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: பற் கமின்ஸ் (அணித்தலைவர்), ஷோன் அபொட், அஸ்தன் அகர், அலெக்ஸ் காரி, கமரொன் கிறீன், ட்ரெவிஸ் ஹெட், ஜொஷ் இங்லிஸ், மர்னுஸ் லபுஷைன், மிற்செல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், ஜையை றிச்சர்ட்ஸன், ஸ்டீவ் ஸ்மித், மிற்செல் ஸ்டார்க், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், டேவிட் வோர்னர், அடம் ஸாம்பா.

## ‘மெஸ்ஸியின் மீள்வருகைக்காக பார்சிலோனாவின் கதவுகள் திறந்துள்ளன’



ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவுக்கு, பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான லியனல் மெஸ்ஸி மீளத் திரும்புவதற்கான கதவுகள் எப்போதும் திறந்துள்ளதாக பார்சிலோனாவின் பயிற்சியாளர் ஸ்கெவி பெர்ணாண்டஸ் தெரிவித்துள்ளார்.

நடப்புப் பருவகாலத்துடன் பரிஸ் ஸா ஜெர்மைனுடனான 35 வயதான ஒப்பந்தம் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

சம்பியன்ஸ் லீக்:

## சமநிலையில் சிற்றி லெய்ப்ஸிக் போட்டி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான ஆர்.பி லெய்ப்ஸிக்கின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றிக்குமிடையிலான இறுதி 16 அணிகளுக்கிடையிலான முதலாவது சுற்றுப் போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலைஹ் றியாட் மஹ்ரேஸ் பெற்றதோடு, லெய்ப்ஸிக் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜொஸ்கோ கவிரால் பெற்றிருந்தார்.



## க்றூஸுக்கு புதிய ஒப்பந்தம்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் மத்தியகளவீரரான டொனி க்றூஸுக்கு புதிய ஒப்பந்தத்தை வழங்க அக்கழகம் தயாராகுவதாகக் கூறப்படுகிறது.

ஓய்வு குறித்து 33 வயதான க்றூஸ் கருத்திற் கொள்கையில், தற்போது ஓய்வு பெறுவதா அல்லது மட்ரிட்டில் மேலும் ஓராண்டுக்குத் தொடருவதா என்பது குறித்து அவர் சிந்திப்பதாகக் கூறப்படுகிறது.



பிரேசில்

# விளையாட்டில் தோல்வி


பார்வையாளர்கள் 7 பேர் சுட்டுக் கொலை

பிரேசிலில் சினாப் சிட்டி என்ற இடத்தில் பில்லியர்ட்ஸ் கிளப் ஒன்று உள்ளது.

இந்நிலையில் குறித்த கிளப்பில் பில்லியர்ட்ஸ் விளையாடிய ‘ஒலிவரா‘ என்பவர் தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் அதில் தோல்வியடைந்துள்ளார்.

இதன்போது அங்கிருந்த சிலர் அவரைப் பார்த்து சிரித்ததால் ஆத்திரமடைந்த அவர், தனது நண்பருடன் வந்து குறித்த கிளப்பில் இருந்த 12 வயதுச் சிறுமி உட்பட 7 பேரை சுட்டுக் கொலை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





அமெரிக்கா

## இப்படியும் ஒரு சாதனையா?

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்த ‘Nick Stoeberl ‘என்ற நபர் தனது 3.97அங்குல நீளம் கொண்ட நாக்கினால் ஓவியம் வரைந்து சாதனை படைத்துள்ளார்.

இதன்காரணமான 33 வயதாக இவருக்கு ‘Lickasso ‘என்ற புனைப்பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவர் வரைந்த குறித்த ஓவியமானது 2,200 டொலருக்கு விற்பனையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

XXXX

## சீனா, தஜிகிஸ்தானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

சீனாவின் ஜின்ஜியாங் உய்குர் தன்னாட்சிப் பகுதியிலும், தஜிகிஸ்தான் எல்லை பகுதியிலும் நேற்றுக் காலை 7.2 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக இந்நிலநடுக்கமானது ஜின்ஜியாங் பிராந்தியத்தின் மேற்குப் பகுதியில் உள்ள கஷ்கர் மற்றும் ஆர்டக்ஸ் ஆகிய இடங்களில் வலுவாக உணரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இந்நில நடுக்கத்தினால் இதுவரை உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



சீனா

## சீனாவில் பதற்றம் ;50 க்கும் மேற்பட்டோர் இடிபாடுகளுக்குள் சிக்கித் தவிப்பு

சீனாவில் அண்மையில் நிலக்கரிச் சுரங்கமொன்று இடிந்து விழுந்ததில் 2 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும், 50 க்கும் மேற்பட்டோர் சுரங்கத்திற்குள் சிக்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலக்ஸா லெஃப்ட் என்ற சுரங்கமே இவ்வாறு திடீரென இடிந்து விழுந்துள்ளது.

இதில் சுரங்கப் பணியில் ஈடுபட்டிருந்த 50 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர்.

இதுவரை 8 பேர் மீட்கப்பட்டுள்ள நிலையில், ஏனையவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.



ஜப்பான்

## ஆண்களுக்கு மாத்திரமே அனுமதி

ஜப்பானில் `ஒக்கினோசமா` என்ற புகழ்பெற்ற தீவொன்று உள்ளது. சுமார் 700 சதுர மீற்றர் பரப்பளவில் அமைந்துள்ள இத்தீவானது யுனஸ்கோவின் உலக பாரம்பரியம் மிக்க தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது நான்காம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை கொரிய தீவுக்கும் சீனாவிற்கும் இடையேயான வர்த்தக மையமாக இருந்துள்ளது.

இந்நிலையில் இத்தீவில் பழங்காலம் தொட்டு இன்று வரை பல விநோதமான கட்டுப்பாடுகள் காணப்படுவதாகவும், குறிப்பாக அங்கு பெண்கள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், பாதிரியார்கள், ஆராய்ச்சியாளர்கள், இராணுவ வீரர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு மாத்திரமே உள்ளே செல்ல அனுமதி வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சீனா

## சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கழிப்பறையால் அதிர்ச்சி

சீனாவில், 2.400 ஆண்டுகள் பழமையான நவீன கழிப்பறையைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஷான்சி மாகாணத்திலுள்ள, யுயாங் தொல்பொருள் தளத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போதே இக் கழிவறையானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக் கழிவறையைக் கண்டு தாம் ஆச்சரியம் அடைந்ததாகவும் தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

“சீனாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட முதல் மற்றும் ஒரே ஃப்ளஷ் கழிப்பறை இதுவாகும்” என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில் கழிப்பறையில் இருந்து எடுக்கப்பட்ட மண் மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் பழங்கால மக்களின் உணவு முறைகள் மற்றும் உணவுப் பழக்க வழக்கங்களையும் கண்டறியலாம் எனக் கூறப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 24 பெப்ரவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.